
தமிழரசு

16.4.1996 ரூ.3





# இந்த இதழில்...

★ உலகம் போற்றும் உத்தமத் தலைவன் ........ 2

★ தமிழ்ச் சுவடி மீட்ட இராஜராஜன் ........ 9

★ பூஜைப் பொருள் கண்காட்சி ........ 15

★ இயற்கையோடு இயைந்த இருளர்களின் இனிய வாழ்வு ........ 17

★ மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் வாழ்வில் ஒளி விளக்கேற்றிடுவோம் ........ 21

★ பாரதி கனவு நனவாகும்
—முனைவர் இராதா தியாகராசன் ........ 25

★ வருங்காலச் சந்ததியினருக்கு ஒரு வரலாற்றுப் பெட்டகம் ........ 33

★ செந்தமிழுக்குச் சீர்செய்த சேதுப்பிள்ளை
—அன்புப்பழம் நீ ........ 41

இதழ்தோறும் ஓர் இனிய குறள்:

செயற்பால தோரும் அறனே ஒருவற்கு
உயற்பால தோரும் பழி

★ ஒருவன் வாழ்நாளில் முயற்சி மேற்கொண்டு செய்யத் தக்கது அறமே; செய்யாமல் காத்துக் கொள்ளத் தக்கது பழியே.

**தமிழரசு**

திருவள்ளுவராண்டு - 2027

சித்திரைத் திங்கள் : 4

மலர்: 26 இதழ்: 20

16.4.1996

விலை: ரூபாய் 3



# உலகம் போற்றும் உத்தமத் தலைவன்!

ஏப்ரல் 14 டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாள்

**'தீ**ண்டாமை' என்னும் கொடுமையைக் களைய மராட்டிய மண்ணிலிருந்து தோன்றினார் ஒரு மாபெரும் மேதை. அனைத்து நாடுகளும் கண்டு வியந்த அற்புதத் தலைவன். மனித சமுதாயத்தை மாண்புறச் செய்த கோமான். அவரே அம்பேத்கர் என்றழைக்கப்படும் பீமாராவ் ராம்ஜி அம்பேத்கர்.

உலகம் போற்றும் உத்தமத் தலைவனாம் அண்ணல் அம்பேத்கர் **1891**-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பதினான்காம் தேதி ராம்ஜி பீமாபாய் ஆகிய தம்பதியருக்குப் பதினான்காவது திருமகனாகப் பிறந்தார்.

தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு இழைக்கப்பட்ட கொடுமையைத் தடுத்து நிறுத்தி, பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை என்ற கருத்தை எடுத்துரைத்து, தீண்டாமையை அகற்றப் பாடுபட்டவர்தான் அம்பேத்கர். சாதிகள் இல்லையடி பாப்பா! குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்' என்று பாடிய பாரதியின் கனவை நனவாக்க அல்லும் பகலும் பாடுபட்டார் அண்ணல் அம்பேத்கர்.

### பள்ளியிலே பசுந்தளிர்கள் பட்ட கொடுமை

அண்ணல் அம்பேத்கர் ஆரம்பக் கல்வி முடிந்ததும் 'சதாராவில்' இருந்த ஓர் உயர்நிலைப் பள்ளியில் சேர்க்கப் பட்டார். இப்பள்ளியில் தாழ்த்தப்பட்ட இனத்தவர்கள் என்று கருதப்பட்ட மாணவர்களுக்கு வகுப்பறையில் ஒரு மூலையில்தான் இடம் கிடைத்தது. மற்ற மாணவர்களுடன் மரப்பலகையில் உட்கார அவர்களுக்கு அனுமதி மறுக்கப் பட்டது. தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குத் தண்ணீர் தாகம் எடுத்தால், உயர்சாதி மாணவர்கள் தாழ்த்தப்பட்ட மாணவர்களின் வாயில் தண்ணீரை ஊற்றுவார்கள்.

பள்ளிக்கூடத்தில் உயர்சாதி ஆசிரியர்களும், மாணவர்களும், தம்மையும், தம்மைப் போன்ற பிற மாணவர்களையும் நடத்திய கீழ்த்தரமான முறையைக் கண்டு அம்பேத்கரின் மனம் வேதனைக்குள்ளானது. இக் கொடுமைகளுக்கெல்லாம் விடிவு கிடைக்காதா என்று அன்றைக்கு ஏங்கியது அந்தப் பிஞ்சு நெஞ்சு. ஆனால் அந்த விடிவை அவரே பின்னாளில் கொண்டு வந்தார் என்பதுதான் சிறப்புக்குரியது.

### பார் உயரப் பாடுபடவே படித்தார்! பட்டம் பெற்றார்!

அண்ணல் அம்பேத்கர், பின்பு பம்பாயில் உள்ள மராத்தா உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார். பள்ளிப் பாடங்களைப் படிப்பது மட்டும் அல்லாமல் மற்ற வகையான அனைத்து நூல்களையும் படித்தார். புத்தரின்பால் அன்பு கொண்டு கௌதம புத்தரின் வாழ்க்கை வரலாற்றைப் படித்துணர்ந்தார். பள்ளியில் வடமொழி கற்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை என்றாலும் பின்னாளில் சில பண்டிதர்கள் உதவியுடன் கற்றுக் கொண்டார். பின்பு கடுமையாக உழைத்து மெட்ரிகுலேசன் தேர்வில் தேர்ச்சி அடைந்தார். அந்நாளில் தான் **1905**-ஆம் ஆண்டு தனது **14**-வது வயதில் அம்பேத்கர், இராம் என்கிற இராமாபாய் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். பின்பு மேற்கல்விக்காக பரோடா மகாராஜா சயாஜி ராவ் உதவியுடன் **1912**-ஆம் ஆண்டில் பி.ஏ., பட்டம் பெற்றார். **1913**-ஆம் ஆண்டு ஜூலை

மூன்றாம் வாரம் அம்பேத்கர் கொலம்பியா பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார்.

கொலம்பியா பல்கலைக் கழகம், 1915-ஆம் ஆண்டில் அம்பேத்கருக்கு எம்.ஏ., பட்டம் அளித்தது. இந்தப் பட்டம் 'பண்டைக்கால இந்தியாவின் வாணிபம்' என்ற தலைப்பில் எழுதப்பட்ட ஆராய்ச்சிக்காகக் கிடைத்தது. மீண்டும் 1916-ஆம் ஆண்டு 'இந்தியாவின் தேசியப் பங்கு வீதம்' என்ற மற்றொரு கட்டுரை எழுதி 'தத்துவப் பேரறிஞர்' என்ற பட்டத்தைப் பெற்றார். கோல்காபூர் என்ற சிற்றரச மன்னரின் உதவி பெற்று 'ஊமைகளின் தலைவன்' என்னும் ஓர் இதழைத் தொடங்கி, தீண்டாமைக் கொடுமைகளை எழுதினார். இதனால் தாழ்த்தப் பட்டவர்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்பட வழிவகுத்தது.

**மேல்சாதி கொடுமையிலிருந்து வேண்டும் வேண்டும் விடுதலை!**

அமெரிக்காவில் படித்து முடித்த பிறகு அம்பேத்கர் தாயகம் திரும்பி, பரோடா மன்னரின் உதவியுடன் படைச் செயலாளர் பதவியில் அமர்ந் தார். அங்கு தங்க இடவசதி அளிக்க எவரும் முன்வர வில்லை. அதனால் தம் பெயரை மாற்றி சத்திரம் ஒன்றில் இடம் பெற்றுவிட்டார். இதற்கிடையில் பம்பாயில் இருந்த சிடேன்காம் கல்லூரியில் பொருளாதாரப் பேராசிரியர் பதவி ஒன்று கிடைத்தது. இப்பதவியில் இருந்த போது மேல்சாதி மக்களின் கொடுமைகளிலிருந்து சுதந்திரம் வேண்டும், சமத்துவம் வேண்டும், மக்களிடையே சகோதரத்துவம் வேண்டும் எனக் கூறினார். தாழ்த்தப்பட்டோர் மாநாடு களிலும் கலந்துகொண்டு உரை யாற்றினார். மீண்டும் மேற் படிப்பிற்காக இலண்டன் மாநகர் சென்று எம்.எஸ்சி., பட்டமும் பெற்றார்.

**எளிய மக்கள் துயர் நீக்க இலவசமாய் வாதாடினார்**

1923-ஆம் ஆண்டு பம்பாயில் இருந்தபடியே 'ரூபாய் பற்றிய பிரச்சினை' என்ற ஆராய்ச்சிக் கட்டுரை எழுதி டி.எஸ்சி., பட்டம் பெற்று சட்டத் தேர்வும் எழுதி அனைவரும் போற்றும் 'பாரிஸ்டர்' பட்டமும் பெற்றார். தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு இலவசமாக வழக் காடினார்.

அம்பேத்கரின் அரிய சேவை களுக்காக பம்பாய் மாகாண ஆளுநர், பம்பாய் சட்டமன்ற மேலவை உறுப்பினர் பதவியை அளித்துக் கௌரவித்தார்.

**சைமனிடம் முறையீடு இலண்டனிலே மாநாடு**

அம்பேத்கர் பம்பாய் சட்டக்

**அண்ணல் அம்பேத்கர் தனது அருந்துணைவி இராமாபாய் அம்மையாருடன்**




கல்லூரியில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பம் செய்து கொண்ட உடனே அந்தப் பதவி அவருக்குத் தரப்பட்டது. இச்சமயத்தில்தான் சைமன் குழு இந்தியாவிற்கு வந்தது. இக்குழுவிற்கு அனைத்து வகைகளிலும் ஒத்துழைக்க அரசு ஏற்படுத்திய குழுவில் அம்பேத்கரும் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். தாழ்த்தப்பட்டோருக்கு இழைக்கப்படும் இழி நிலைகள், அவர்களது உடனடித் தேவைகள் குறித்து ஓர் அறிக்கையை சைமன் குழுவிடம் கொடுத்தார் அம்பேத்கர்.



இந்தியாவில் சுதந்திர தாகம் மேலோங்கி வருவதை ஆங்கிலேயர் அலட்சியப்படுத்த முடியவில்லை. இதற்காக ஒரு வட்ட மேசை மாநாட்டை இலண்டனில் நடத்த முடிவு செய்தனர். இம்மாநாட்டில் கலந்துகொண்ட இந்தியப் பிரமுகர்களுள் டாக்டர் அம்பேத்கரும் ஒருவர். இம்மாநாட்டில் டாக்டர் அம்பேத்கர் கலந்து கொண்டு இந்தியாவில் தாழ்த்தப்பட்ட மக்கள் படும் இன்னல்களை எடுத்துரைத்தார்.

முதல் வட்டமேசை மாநாட்டுக்குப் பின் அண்ணல் காந்தியடிகளும், டாக்டர் அம்பேத்கரும் ஒருவரையொருவர் சந்தித்து, தாழ்த்தப்பட்டோர்களின் முன்னேற்றத்திற்கு இருவரும் பாடுபட்டனர்.

மகத் பகுதியின் சௌதார் குளத்தில்
சத்தியாக்கிரகப் போர் நடத்துகிறார் டாக்டர் அம்பேத்கர்



*1931*-ஆம் ஆண்டில் இரண்டாவது வட்டமேசை மாநாடு கூட்டப்பட்டது. இம்மாநாட்டில் பண்டித மதன்மோகன் மாளவியா, கவிக்குயில் சரோஜினி நாயுடு ஆகிய தலைவர்களுடன் மகாத்மா காந்தியடிகளும் கலந்து கொண்டார். இம்மாநாட்டில் டாக்டர் அம்பேத்கர் ஆற்றிய உரை அனைவரையும் கவர்ந்தது.

*1935*-இல் அம்பேத்கரின் மனைவி உயிரிழந்தார். இதனால் மனமுடைந்த அம்பேத்கர் மஞ்சள் நிறத்தினாலான அங்கியைத் தரித்துக்கொண்டு அசல் துறவியைப் போல் காட்சியளித்தார்.

**தாழ்த்தப்பட்டோர் நலனுக்குத் தனி இயக்கம் கண்டார்!**

*1937*-ஆம் ஆண்டு 'சுதந்திரத் தொழிலாளர் கட்சி' என்ற பெயருடன் கட்சி ஆரம்பித்து தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றம் அக்கட்சியின் குறிக்கோளாகக் கொண்டு தாழ்த்தப்பட்டோரின் நலனுக்காகப் பாடுபடத் தொடங்கியது. பின்பு அம்பேத்கர் வைசிராய் நிர்வாக சபை உறுப்பினராகவும், தொழிலாளர் அமைச்சராகவும் அம்பேத்கர் நியமனம் பெற்றார்.

தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி நலம் பெற 'மக்கள் கல்விக் கழகம்' என்ற அமைப்பைத்

தொடங்கி சிறப்புடன் நடத்தினார். இதன் அடிப்படையில் பம்பாயில் 'சித்தார்த்தா கல்லூரி' ஒன்று உருவாக்கப் பட்டது.

வங்காளத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட சமூக சட்டமன்ற உறுப்பினர்களும், முஸ்லீம் லீக் உறுப்பினர்களும் அம்பேத்கரின் திறமையைப் பாராட்டி அவரை, அரசியல் நிர்ணய சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கத் தங்கள் வாக்குகளை அளித்தனர்.

**சுதந்திர இந்தியாவின் சட்ட அமைச்சர்**

ஆங்கிலேய அரசாங்கம் இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுக்கத் தேதியை நிர்ணயித்து அதன்படி இங்கிலாந்து நாடாளு மன்றம் ஜூலை 15-ஆம் நாள் இந்தியச் சுதந்திரச் சட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது. பிரதமர் நேரு, சுதந்திர இந்தியாவின் மந்திரி சபையில் சட்ட அமைச்சராக இருந்து பணிபுரியுமாறு அம்பேத்கரைக் கேட்டுக் கொண்டார்.

**அரசியல் சட்ட வரைவில் அருமைமிக்க தலைவர்**

இந்தியா சுதந்திரம் பெற்ற சில நாட்களில் மீண்டும் அரசியல் நிர்ணய சபை, அரசியல் சட்டத்தை அமைப்பதற்கு ஒரு வரைவுக் குழுவை நியமித்தது. இக்குழுவின் தலைவராக அம்பேத்கர் முழு மனதாக நியமிக்கப்பட்டார்.

இவருக்கு உதவியாக ஏழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு அரசியல் சட்டம் தயாரிக்கும் பணி செம்மையாகச் செயல்பட உதவினார்கள். அம்பேத்கர் தமக்கிட்ட பணியை திறம்படச் செய்தார். ஒற்றுமை இல்லாத காரணத்தினால்தான் இந்தியா அடிமைப்பட நேரிட்டது என்று வாதிட்டார். சாதி வேறுபாடுகளை ஒழித்து ஒற்றுமையாக வாழவேண்டும் என்று வற்புறுத்தினார்.

முதன்முதல் இந்திய சட்ட வரைவைத் தயாரித்தமையால் 'இந்திய அரசியல் சட்டத்தின் தந்தை' என்றும் இவர் பாராட்டப்பட்டார்.



**சட்ட அமைச்சராக பதவிப் பொறுப்பேற்கிறார் டாக்டர் அம்பேத்கர்**

**புனிதராம் புத்தரின் மதத்திலே இணைந்தார்**

டாக்டர் அம்பேத்கருக்கு ஓய்வு தேவைப்பட்டதால் மருத்துவமனையில் சேர்ந்தார். அங்கு டாக்டர் சாரதா என்னும் அம்மையாரை இரண்டாம் திருமணம் செய்துகொண்டார். பின்பு புத்த மத மாநாடுகளில் கலந்துகொண்டுடார். புத்த மதத்தின்பால் பற்று இருந்ததினால் 1956-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தம் துணைவியாருடன் புத்த சமயத்தில் சேர்ந்தார். இவருடன் பலரும் புத்த சமயத்தில் சேர்ந்தனர்.

அப்போது, "நீங்கள் ஒரு புத்திசாலித்தனமான காரியத்தைச் செய்திருக்கிறீர்கள் பாராட்டுகிறேன்" என்று தந்தை பெரியார் ஒரு வாழ்த்துத் தந்தி அனுப்பினார்.

கொலம்பியா பல்கலைக் கழகம் டாக்டர் அம்பேத்கரை அழைத்துச் 'சட்டப் பேறறிஞர்' என்னும் பட்டத்தையும், உஸ்மானியப் பல்கலைக் கழகம்

# அண்ணல் அம்பேத்கர்



1944-ஆம் ஆண்டு சென்னையில்
தந்தை பெரியாருடன் டாக்டர் அம்பேத்கர்

அம்பேத்கரை வரவேற்று 'இலக்கியப் பேரறிஞர்' என்னும் பட்டத்தையும் வழங்கிச் சிறப்பித்தது.

**தலைசிறந்த நூலாசிரியர்**

அம்பேத்கர் மிகச் சிறந்த பேச்சாளர். புகழ்பெற்ற எழுத்தாளர். 'இந்துக்கள் நமக்கு என்ன செய்திருக்கிறார்கள்?' 'தீண்டத் தகாதவர்கள்' போன்ற பல நூல்களை எழுதியுள்ளார்.

'ஊமைகளின் தலைவன்', 'ஒதுக்கப்பட்ட இந்தியா', 'மக்கள்' 'சமத்துவம்' போன்ற பத்திரிகைகளைத் திறம்பட நடத்தினார். அவற்றின்மூலம் தாழ்த்தப்பட்ட மக்கள் தலை நிமிர எழுதினார்.

**மறைந்தும் மறையாதவர்!**

அம்பேத்கரின் அயரார்த உழைப்பாலும், சிந்தனையாலும், அவரின் உடல்நிலை மோசமாகிக் கொண்டே வந்தது. அதைப்பற்றிக் கவலைப்படாமல் அந்த உத்தமத் தலைவர் உழைத்துக்கொண்டே இருந்தார். திடீரென 1956-ஆம் ஆண்டு டிசம்பர் 6-ஆம் தேதி டெல்லியில் காலமானார்.

தீண்டாமையை அகற்ற தன் வாழ்நாள் முழுவதும் பாடுபட்ட இந்தப் புனித தலைவரின் உடல் மறைந்தாலும் அவரது புகழ் என்றும் மறையாது. 'கற்பி, ஒன்றுசேர், புரட்சிசெய்' என்ற கோட்பாட்டினை வகுத்த அந்த அருமைத் தலைவரின் வழி நடந்து புதுயுகம் படைப்போமாக!

—அ. மதிமாறன்

**✯ சமூக சீர்திருத்தத்திற்கு உள்ள வழி இந்தியாவைப் பொறுத்தவரையில் சுவர்க்கத்திற்கு உள்ள வழிபோலக் கரடுமுரடானது; சங்கடமானது ஆபத்துகள் நிறைந்தது!**

**✯ இந்தியாவில் சமூக சீர்திருத்தத்திற்கு நண்பர்கள் சிலரே, எதிரிகளே அதிகம்! எதிரிகள் இருவகை: ஒரு கூட்டத்தார், அரசியல் சீர்திருத்தக்காரர்; மற்றவர்கள் அபேதவாதிகள்.**

**✯ இந்திய சமூக அமைப்பைத் திருத்தியமைக்க வேண்டுமானால் அரசியல் சீர்திருத்தத்திற்கு முன் சமூக சீர்திருத்தம் ஏற்பட வேண்டுமென்னும் எனது கொள்கையை ஒருவராலும் மறுக்க முடியாது.**

**✯ "ஜனநாயகம்" எங்கு வேண்டுமாயினும் வளரும் செடியன்று. சமுதாயத்தில் இருக்கின்ற ஏற்றத்தாழ்வுகளே ஜனநாயகத்தை அழிக்கின்ற கரையான்கள் ஆகும். ஆதலால், மக்களின் நல்வாழ்விற்கான திட்டங்கள், செயல்முறைகள் ஆகியவற்றைக் கொண்டதே உண்மையான ஜனநாயகம் ஆகும்.**

**✯ தீண்டாமை, மதத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டதல்ல பொருளாதாரத்தையும் அடிப்படையாகக் கொண்டது. இது அடிமைத் தனத்தைக் காட்டிலும் மிகவும் மோசமானது.**

## ...பொன் மொழிகள்


"நம்மை நாமே உயர்த்திக் கொள்ள வேண்டும். சுயமாக வாழ்வது எப்படி என்று கற்றுக் கொள்ள வேண்டும். தன் மானம் உடையவர்களாக வாழ வேண்டும். நாமாக முயற்சி செய்து நம் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். இவற்றைச் செய்தால் நாம் உயர்வது உறுதி

- ✯ ஒரு நாடு, மற்றொரு நாட்டை அடிமைப்படுத்தி வைக்க எவ்வித உரிமையும் கிடையாது.
- ✯ சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய வற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூக அமைப்பே, எனது இலட்சியம்.
- ✯ அறிவானது மனிதனுடைய வாழ்வின் அடித்தளம் ஆகும். ஆதலால், மாண வர்கள் தங்களது முயற்சிகள் அனைத்தையும் பகுத்தறிவின் ஆற்றலைக் கொண்டு நிர்வகிக்கக் கூடியவைகளாக அமைத்துக் கொள்ள வேண்டும்.

"சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூக அமைப்பே என்னு டைய இலட்சியம், சமூகத்தில் அங்கம் பெற்றிருக்கும் உறுப் பினர் பரஸ்பரம் நீக்கமறக் கலந்து கொள்வதற்குச் சமூக அமைப்பில் இயல்பாகவே இடம் இருக்க வேண்டும் அது தான் உண்மையான சகோதரத் துவமாகும்".

## தூய்மை தொடர வேண்டும்!





தூய்மை வாழும் இடமே, காக்கும்
தெய்வம் வாழும் இடமாம்!
தூய்மை வாழும் இடமே, நோயும்,
துன்பமும் தோன்றா இடமாம்!

வீட்டின் உள்ளும் புறமும், தூய்மை
விளங்கச் செய்தல் நன்று! - அது,
வீட்டுக்கும் நாட்டுக்கும் நல்லது; நாளும்
செய்வோம் அப்பணி விரைந்து!

மனிதன் கண்ட அறிவி யலாலே,
வளரும் தொழில்களி னாலே...
இனிய நிலம், நீர், காற்று, வானம்
மாசுற்ற தே, இந் நாளே!

நீரும் நிலமும் காற்றும் வானமும்
தூய்மை கெடக் கூடாது! கெட்டால்,
ஊரும் உலகும் மக்களும் பிறவும்
ஒன்றுமே நிலைபெ றாது!

உற்ற உடலும் உயிரும் உலகும்
பிறவும் வாழ வேண்டும்! என்றால்,
சுற்றுப் புறத்தைச் சூழலைத் தூய்மை
செய்தல் தொடர்ந்திட வேண்டும்.

–கவிஞர் முருகுவண்ணன்



Phone: 60218 (Anthiyur Ex.)

**சின்னபருவாச்சி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம் லிட்., நெ. E.H. 110**

சின்னபருவாச்சி செம்புலிச்சாம்பாளையம்
பவானி Tk - 638 302
பெரியார் மாவட்டம்

பவானி கிளை: 74, பழனியாண்டவர் கோவில் வீதி, பவானி

எங்களிடம் அனைத்து சைஸ் ஜமுக்காளங்கள் ஹால் கார்பெட்டுகள், பந்திசுருள் எல்லா சைஸ்களிலும் கிடைக்கும்.

| | |
|---|---|
| ரகங்களில் புதுமை | குறைந்த விலை |
| நெசவில் நேர்த்தி | உத்திரவாதமுள்ளது |
| உழைப்பில் உறுதி | கெட்டிசாய ஜமக்காளங்கள் |

R. சிவக்குமார், மேலாளர்
M. ரங்கசாமி, விற்பனையாளர்
A. எல்லப்பன், அப்ரைசர்
K. நாராயணன், ஆபீஸ் பாய்

கோ. கருணாநிதி B.Sc., H.D.c., கைத்தறி அலுவலர்/ தனி அலுவலர்

**நல்வாழ்த்துக்கள்**

**ஸ்ரீ வெங்கடேஸ்வரா நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிட்., E.H. 109**

பருவாச்சிக்காட்டூர், பருவாச்சி - 638 302

**விற்பனை நிலையம்:**
245, காமாட்சியம்மன் கோவில் வீதி,
பவானி - 638 301
பெரியார் மாவட்டம்

எங்களிடம் அறை விரிப்புகள் (Hall Carpets) பந்தி ஜமக்காளம், அக்ரலிக் ஜமக்காளங்கள் மற்றும் 28 x 72, 34 x 72, 40 x 78, 46 x 84, 52 x 90, 60 x 90, சைஸ்களில், புதுமையான ரகங்களில் பவானி கெட்டிச்சாய ஜமக்காளங்கள் கிடைக்கும்.

ஈ. மோகனவேலு, பி.எஸ்ஸி.,டி.கோப்., மேலாளர்
ஒ.கு. ராமசாமி
இரா. வெங்கடாஜலபதி } பணியாளர்கள்

க.வி. பாபுஜி, பி.காம்., கைத்தறி ஆய்வாளர்/ தனி அலுவலர்

*With best compliments from:*

Phone: *67031*
*67162*
Grams: VEERATEE

# V.R. TEXTILES LIMITED

**Registered Office & Mills**

Nallur-punjai Puliampatti - 638 459

Sathy Taluk

PERIYAR DISTRICT

***Manufacturers of:***

Deluxe Special Warp Cotton Yarn - Hanks & Cones

*20*$^{s}$, *40*$^{s}$ CARDED and *100*s COMBED

# தமிழ்ச் சுவடி மீட்ட இராஜராஜன்



**ப**ழந்தமிழ் இலக்கியங்கள் காட்டிடும் பைந்தமிழ் மக்கள் வாழ்க்கை நெறிமுறை களையும் பண்பாட்டுப் பெருமைகளையும் விளக்கும்வண்ணம், எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டி தமிழ்நாடு அரசால் படைக்கப்பட்ட 'இலக்கியச் சோலை' திரைக் காவியத்தில் ஒரு பகுதி "தமிழ்ச் சுவடி மீட்ட இராஜராஜன்".

### பங்கு பெற்ற கலைஞர்கள்

நடிகர்கள் : அர்ஜுன்
எம்.என். நம்பியார்
மலேசியா வாசுதேவன்
கலைஞானம்

நடிகை : ஜே.ஜி. சியாமளா

ஒப்பனை : முத்தப்பா

உடைகள் : ஆசிர்வாதம்

கலை : தோட்டா தரணி

படத் தொகுப்பு : பி.எஸ். நாகராஜ்

வசனம்

பாடல்கள் : புலவர் புலமைப்பித்தன்

ஒளிப்பதிவு : அப்துல் ரஹ்மான்

இசை : விஸ்வநாதன்-
இராமமூர்த்தி

தயாரிப்பு ஒருங்கிணைப்புக் குழு:
எஸ்.பி. முத்துராமன், ரமேஷ் பிரசாத்

தயாரிப்புப் பொறுப்பு:
எம். சரவணன்,
எம். பாலசுப்பிரமணியம்,
எம்.எஸ். குகன்

தயாரிப்பு: இயக்குநர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை
தமிழ்நாடு அரசு

திரைக்கதை - இயக்கம்:
ஆர்.வி. உதயகுமார்

---

### காட்சி - 1

(தஞ்சைப் பெரிய கோவில் கோபுரம் கம்பீரமாகப் பின்னணியில் தோற்றமளிக்க மாமன்னன் இராஜராஜன் புடைசூழ நடந்து வந்து கொண்டிருக்கிறான்.)

**ஒருவன்:** மாமன்னர் இராஜராஜ சோழர்!

**மக்கள்:** வாழ்க! வாழ்க!

(மாமன்னன் இராஜராஜன் வீரமிகு நடை பயில பின்னணியில் குரல் ஒலிக்கிறது.)

**இந்த இராசராசன்-**

**பொங்கு கடல் கடந்த பூமி எல்லாம் தன் காலில் விழ வைத்திட்டவன், தஞ்சை**

**மண்ணின் மங்காத புகழுக்கு விஞ்ஞான வித்திட்டவன், கோபுரத்தின் நிழல் மண்ணில் விழாதபடி கோயிலைக் கட்டினான். எட்டுத் திக்கும் தன் புகழ் நிலைக்க வெற்றிமுரசு கொட்டினான். மறைக்கதவு திறந்த தேவாரத் திருமுறைகள் பூட்டி வைக்கப்பட்டிருந்த தில்லை நடராசர் கோவிலின் அறைக் கதவு திறந்து தமிழுக்கு விடுதலை கொடுத்தான்.**

(மாமன்னன் இராஜராஜனின் வீரத்திற்கும் தீரத்திற்கும் ஈடுசெய்யும் கம்பீரம் இதுதானோ என்னும் வகையில் தஞ்சை பெரிய கோயில் கோபுரம் நம் கண் முன்னே எழுகிறது.)

(காட்சி முடிவு)

## காட்சி - 2

(**இடம்:** மன்னன் அரசவை

**பாத்திரங்கள்:** மாமன்னன் இராஜராஜன், கருவூர்த் தேவன், அமைச்சர் மற்றும் அரசவைப் பெருமக்கள்.)

**இராஜ:** ம்... கருவூர்த் தேவரவர்களே

**கருவூர்த் தேவன்:** அரசே

**இராஜ:** பெரிய கோயில் கட்டுமானப் பணிகளை நாம் பார்த்துக் கொண்டிருந்த போது ஒருவர் பாடினாரே அந்தப் பாடல் தங்கள் கவனத்தில் இருக்கிறதா?

**கரு:** இருக்கிறது அரசே

**இராஜ:** அந்தப் பாடலை ஒரு முறைப் பாடமுடியுமா?

**கரு:** மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை
பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே

**இராஜ:** ஆகா... ஆகா... மிக்க மகிழ்ச்சி. இந்தப் பாடலை இயற்றியது யாரென்று தங்களுக்குத் தெரியுமா?

**கரு:** அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகிய மூவர் தேவாரத்தில் உள்ள பாடல் அரசே இது.

**இராஜ:** அடடா! கருத்துத் தேனூறும் பாடல். ஆமாம் இந்தப் பாடல்கள் முழுவது மாகத் தங்களுக்குத் தெரியுமா?

**கரு:** வேந்தே ஒரு சில பாடல்கள்தான் எனக்குக் கிடைத்தன.

**இராஜ:** அனைத்தும் அறிந்தவர்கள் யாரேனும் இருக்கிறார்களா?

**கரு:** மன்னா! திருநாறையூரில் நம்பி யாண்டார் நம்பி என்று ஒருவர் இருக்கிறார். அவர் ஒருவருக்குத்தான் எஞ்சிய பாடல் களைப் பற்றித் தெரியும்.

**இராஜ:** மகிழ்ச்சி... மிக்க மகிழ்ச்சி... அப்படியானால் திருநாறையூருக்கு ஆள் அனுப்பி அவரை அழைத்து வரச் சொல்வோம் அமைச்சரே!

**அமைச்சர்:** அரசே

**இராஜ:** ம்... வேண்டாம்... வேண்டாம்...

---

**தில்லை நடராசர் கோயிலில் பூட்டி வைக்கப்பட்டிருந்த . மூவர் அருளிய தேவாரப் பாடல்களைத் தன் மதி நுட்பத்தால் மீட்டு உலகெங்கும் ஒலிக்கச் செய்த இராசராசனின் தமிழ்ப்பற்று**

---

நாளைக் காலை நாமே திருநாறையூருக்குச் செல்வோம். அவரை நேரில் காண்போம்.

**அமை:** அரசே! தாங்களோ மாமன்னர்! எட்டுத்திசை வெற்றிக் கொடி நாட்டிய வேந்தர். கடல் கடந்து நாடுகளில் உள்ள மன்னர்களெல்லாம் தங்கள் காலடியில் வந்து கப்பம் செலுத்துகிறார்கள்.

**இராஜ:** அதனால்...

**அமை:** அப்படிப்பட்ட தாங்கள் அங்கே சென்று அவரைக் காண வேண்டுமா என்றுதான்...

**மன்னன்:** சிரித்தவாறு

**இராஜ:** அமைச்சரே! கடல் கடந்து

சென்றதும் வென்றதும், மாற்றார் கப்பம் செலுத்த இங்கு வந்ததும், இந்தத் தமிழ்ச் சோழன் இராசராசனின் வீரத்திற்கான அடையாளம். ஆனால், ஒரு தமிழாய்ந்த சான்றோரை இந்த இராசராசன் நேரில் சென்று காண்பதுதான் தமிழை மதிக்கக் கற்றுக்கொண்ட அறிவுக்கும் பண்புக்கும் அடையாளம்.

என்னைத் தேடி வந்து காண்பது பலருக்குப் பெருமையாக இருக்கலாம். ஆனால், நம்பியாண்டார் நம்பியை நாம் தேடிச் சென்று பார்ப்பதுதான் நமக்குப் பெருமை. நம் தமிழுக்குப் பெருமை!

(காட்சி முடிவு)

### காட்சி - 3

(**இடம்:** நம்பியாண்டார் நம்பிகளின் குடில்

**பாத்திரங்கள்:** மாமன்னர் இராஜராஜ சோழன், குந்தவைப் பிராட்டி, நம்பியாண்டார் நம்பிகள், கருவூர்த்தேவர்.)

**நம்பி:** சோழப் பேரரசே! மன்னர் மன்னா!

**இராஜ:** வணங்குகிறேன் நம்பியாண்டாரே.

**நம்பி:** அடியேன் மிகவும் எளியேன். இந்த எளியேனைத் தேடித் தாங்கள் வருவதா?

**இராஜ:** நான் தங்களைத் தேடி வந்ததில் வியப்பென்ன இருக்கிறது? கொற்றவனின் செங்கோலும், தமிழ் கற்றவர்- புலமை பெற்றவர் எழுதுகோலுக்கு இணையாவதில்லை! தங்களுக்கு முன்னே நான்தான் எளியவன்.

**நம்பி:** தாங்கள் இங்கு வந்தது யான் பெற்ற பேறு

**இராஜ:** ஆம்... எனக்கும் அப்படித்தான். மூவர் பாடிய தேவாரத்திலிருந்து ஒரு பாடலை நான் கேட்கும் பேறு கிடைத்தது. பாடியவருக்கு ஓரிரு பாடல்கள்தான் கிடைத்தனவாம். எஞ்சிய பாடல்களைத் தாங்கள்தான் அறிவீர்கள் என்று கருவூராரும் என் தமக்கையாரும் சொன்னார்கள்.

**நம்பி:** எஞ்சிய பாடல்கள் அனைத்தும்



எனக்குத் தெரியாது அரசே! ஆனால் அவை எங்கிருக்கிறது என்பது மட்டும் எனக்குத் தெரியும்.

**இராஜ:** சொல்லுங்கள். எங்கேயிருக் கின்றன?

**நம்பி:** தில்லையில்

**இராஜ:** தில்லையிலா?

**நம்பி:** ஆம். மன்னவா! அனாதிகாரம் போல் ஆடிக் கொண்டிருக்கிற எம்பெரு மானின் திருக்கோவிலில், பொற்சிலைக்கு அருகிலுள்ள ஓர் அறையில் இந்த அரிய ஏடுகளைப் பூட்டி வைத்திருக்கிறார்கள்.

**குந்தவை:** தில்லைவாழ் அந்தணரிடம் அனுமதி பெற்றுத் தாங்கள் அவற்றை வாங்கியிருக்கலாமே!

**நம்பி:** குந்தவை பிராட்டியாரே... யானும் அவர்களிடம் பலமுறை பணிந்து

---

சீராரும் திருமுறைகள்
கண்டதிரு பார்த்திபனாம்
ஏராரும் இறைவன்

- திருமுறை கண்ட புராணம்

---

விண்ணப்பித்தேன். அப்படி விண்ணப்பித்தும்...

**இராஜ:** விண்ணப்பித்தும்...

**நம்பி:** பாடிய மூவரும் வந்து கேட்டால் தான் ஏடுகளைத் தருவோம் என்கிறார்கள்.

**இராஜ:** அப்படியா சொன்னார்கள்?

**நம்பி:** ஆம். ஆண்டவன் திருவடிகளைச் சேர்ந்து விட்ட அவர்களை அடியேன் எப்படி அழைத்துச் செல்ல முடியும்?

**இராஜ:** சரி. அதை நான் பார்த்துக் கொள்கிறேன். என்றும் இறக்காத தேவாரத் திருப் பாடல்களைப்பூட்டி வைத்துள்ள அந்தத் திறக்காத கதவுகளை நான் திறக்க வைக்கிறேன்.

(காட்சி முடிவு)

## காட்சி - 4

**(இடம்:** தில்லை திருக்கோயில்

**பாத்திரங்கள்:** இராஜராஜ சோழன், நம்பியாண்டார் நம்பிகள், அமைச்சர், தில்லை திருக்கோயில் குருக்கள்)

(திருக்கோயிலில் குருக்கள் நடராஜருக்கு தீபாராதனை காட்டுகின்றார். தெய்வ சன்னதிக்கு மாமன்னன் இராஜராஜன் வருகின்றான். அவருடன் தெய்வ சன்னதிக்கு நம்பியாண்டார் நம்பிகளும் வருகின்றார். தீபாராதனைத் தட்டை குருக்கள் காட்ட மன்னவரும் மற்றவரும் ஆண்டவனைத் தரிசிக்கின்றனர். பின்னர்... ...)

**குரு:** சோழச் சக்கரவர்த்தி தில்லைக்கு விஜயம் செய்தது நாங்கள் செய்த பாக்கியம். அரசர் வருவதாக முன்னமேயே தூது வந்தது...

**இராஜ:** மூவர் அருளிச் செய்த தேவாரத் திருப்பாடல்களின் ஏட்டுச் சுவடிகள் இங்கே பூட்டி வைக்கப்பட்டிருப்பதாக அறிந்தோம். அதை வாங்கிச் செல்லவே நாம் இங்கு வந்தோம்.

**குரு:** மன்னர் என்னை மன்னிக்க வேண்டும். அவற்றை...

**இராஜ:** தேவாரம் பாடிய மூவரும் நேரில் வந்தால்தான் சுவடிகளைத் தருவீர்கள் என்பதையும் அறிந்தோம்.

**குரு:** ஆம்! மன்னவா!

**இராஜ:** அவர்கள் வந்திருக்கிறார்கள்.

**குரு:** ம்... அரசே!

**இராஜ:** அமைச்சரே... முக்கண் முதல்வரின் திருத்தொண்டர்களாம் அந்த மூவரையும் அழைத்து வாருங்கள்.

(எழிலுடன் அமைந்த மூன்று பல்லக்கு களைப் பல்லக்குத் தூக்கிகள் தோளில் சுமந்து வருகின்றனர்.)

**இராஜ:** வாருங்கள் குருக்களே. இதோ பாருங்கள்...

(அழகுடன் நிற்கும் அப்பர் சிலையைக் காட்டி)

கண்ணுதற் பெருங்கடவுள், கல்லைச் சிற்பமாக்கி அருளியது இந்த அப்பருக் காகத்தான்!

(சிங்காரக் கோலமுடன் நிற்கும் சுந்தரர் சிலையைக் காட்டி)

பாரும் சொற்றமிழ் பாடும் சுந்தரர். தொண்டர் நாதனான நீலகண்டன், காதலுக்குத் தூது போனது இந்த சுந்தரருக்காகத்தான்.

(ஞானத் திருவிளக்காம் சம்பந்தர் சிலையைக் காட்டி)

அந்தப் பார்வதி தேவியே தாயாகி ஞானப்பால் கொடுத்தது இந்த ஞான சம்பந்தருக்குத்தான்!

இப்போது தாங்கள் அந்த திறவுகோலைத் தரலாமல்லவா?

**குரு:** அரசே... பொன்னாலான இந்த விக்கிரகங்களை ஜீவனுள்ள மூவரென்று என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது.

**இராஜ:** என்ன சொன்னீர்? இவை வெறும் சிலைகள்தானா? அப்படியென்றால் அனாதிகாலந்தொட்டு இந்த அம்பலத்தில் ஆடிக் கொண்டிருக்கிறானே ஆண்டவன் அவனும் சிலைதான்! அவனுக்கு உயிர் இருக்கிறதென்றால், இந்தச் சிலைகளுக்கும் உயிர் இருக்கிறது. அவனை, சிலை வடிவில் நிற்கும் அந்தச் சிவனை, நீங்கள் தெய்வ மென்று ஏற்றுக் கொள்வது உண்மை யென்றால் இந்தத் திருத்தொண்டர்களும் உயிருடன் இருக்கிறார்கள் என்பதையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்!

**குரு:** அரசே, என்னை மன்னித்து விடுங்கள்.

(தேவாரச் சுவடிகள் வைக்கப்பட்டிருக்கும் அறையின் சாவியைக் குருக்கள் தனது இடுப்பிலிருந்து எடுத்து மன்னனிடம் கொடுக்கிறார்.)

(காட்சி முடிவு)

## காட்சி - 5

(**இடம்:** திருக்கோயிலின் ஒரு அறை. தும்பும் தூசும் எங்கும் நிறைந்திருக்கிறது. ஒருபுறம் ஓலைச் சுவடிகள் தாறுமாறாகக் குவிந்து கிடக்கின்றன. அறை முழுவதும் சிலந்தி வலை அடை அடையாய்ப் பின்னிக் கிடக்கின்றது.

**பாத்திரங்கள்:** இராஜராஜ சோழன், நம்பியாண்டார் நம்பிகள்)

**இராஜ:** அடடா... எத்தனை ஓலைச் சுவடிகளைக் கரையான் அழித்திருக்குமோ தெரியவில்லையே! நம்பியாண்டாரே! பிடியுங்கள்


**நம்பி:** அரசே, தேவாரம் ஒலிக்கும் இடமெல்லாம் தங்கள் திருநாமம் எதிரொலிக்கும்!

**இராஜ:** எந்நாட்டவருக்கும் இறைவனான தென்னாடுடைய சிவனின் திருக்கோயில்கள் தோறும் இனித் தேவாரம் முழங்கட்டும்.

(பின்னணியில் பாடல் ஒலிக்கின்றது)

**தீந்தமிழ்ப் பாட்டும்**
**பூந்தென்றல் காற்றும்**
**என்றென்றும் இவன்புகழ்**
**பாடிக் கொண்டே இருக்கும்.**

(திரை)



Phone: Off: 30482

Res: 61069

With best compliments from

# OBLI SPINNING MILLS (P) LTD.,

METTUR MAIN ROAD,

KURUPPANAICKEN PALAYAM

BHAVANI - 638 302



With best compliments from:

# INTIME TEXTILE LIMITED

**A LEADING TEXTILES ROTARY SCREEN PRINTING IN**

- HOSIERY
- COTTON FABRICS
- MAN-MADE FABRICS
- VISCOSE
- EXPORT GARMENTS
- SPECIALIST IN TUBLAR FORM
- HOSIERY PRINTING

***Contact:***

394, Dharapuram Road,

TIRUPUR - 641 604

Phone: 0421-713114

713116

713117

***Factory:***

S.F. No.19/2, K.N. Palayam,


Urachikottai - 638 302

BHAVANI Tk

Phone: 04256 - 21770, 30319

Telex: 0858-9393 TUBE IN

Fax: 0421-30596



## பூஜைப் பொருள் கண்காட்சி

# தெய்வீக மணம் கமழும்! ஒருமைப்பாட்டு உணர்வு மிகும்!

**அ**ந்தப் பஞ்சலோகத் திரு உருவச் சிலைகளைப் பார்க்கும் போது, திருக்கோயிலுக்குள் வந்துவிட்டோமோ என்கிற பிரமைமயே ஏற்படுகிறது.

அந்தப் பூஜை மணிகளைப் பார்க்கிற போது, கோயில் மணியோசை காதில் விழுகிற மாதிரி ஒரு உணர்வு ஏற்படு கிறது.

சென்னை அண்ணாசாலையில் உள்ள, காதி கிராமோத்யோக் பவன் சார்பில் நடைபெறும் தெய்வீகப் பூஜைப் பொருள்கள் கண்காட்சியில்தான், இந்தக் கண்கொள்ளாக் காட்சி!


பஞ்சலோகச் சிலைகள் தவிர, பஞ்சலோகத்தில் வெள்ளி முலாம் பூசப்பட்ட 'ராமர் செட்' கண்ணைக் கவர்கிறது. இது பெங்களூரில் தயாரானது. இதன் விலை எவ்வளவு தெரியுமா? ரூ.14,000.

ஜெய்ப்பூரில் உருவான செப்புத் தம்ளர்கள், பம்பாயிலிருந்து வரவழைக்கப்பட்ட வலம்புரிச் சங்குகள் ஆகியவை நம் மனத்தை வெகுவாகக் கவர்கின்றன.

"ஒவ்வொரு வீட்டிலும் வலம்புரிச் சங்கு இருக்க வேண்டியது அவசியமாகும். வலம்புரிச் சங்கும், துளசியும் இருக்கும் இடமெல்லாம், லட்சுமி வாசம் செய்வாள் என்று பாகவதம் கூறுகிறது" என்கிற வாசகங்கள், வலம்புரிச் சங்கின் மகிமையினை நமக்கு எடுத்துக் கூறுகின்றது.

நேபாள நாட்டின் உருத்தி ராட்சங்கள், நம் உள்ளத்தைத் தொடுகின்றன. 'கௌரிசங்கர்' என்னும் ஒருவகை உருத்திராட்ச மணிகள், மற்றும் உருத்திராட்ச வெள்ளித் துளசி மணிமாலைகள் குஜராத்தில் தயாரிக்கப்பட்ட ஸ்படிகத்தினாலான விநாயகர், லிங்கம், மேரு, மற்றும் மாலைகள் ஆகியவை நம் கண்ணைப் பறிக்கின்றன.

வெள்ளெருக்கு வேரினால் ஆன விநாயகர், பாதரசத்திலிருந்து தயாரிக்கப்பட்ட ரசலிங்கம், விநாயகர், குபேர யந்திரம், ரசமணி ஆகியவற்றைப் பார்க்கிறபோது கைவினைஞர்களின் கைவண்ணம் பளிச்சிடுகிறது.



'கல்லுக்குள் ஈரம்' என்பார்கள், ஆனால், 'கல்லுக்குள் அதிசயம்' ஒன்றை இங்கே காண்கிறோம்.

'சாளாகிராமம்' என்பது ஒரு வகைக் கல். இந்தக் கல்லில் அதாவது உடைந்த இந்தக் கல்லின் உள்ளே இயற்கையாகவே சக்கரம் அமைந்துள்ளது. அத்துடன் சிவலிங்கம் போன்ற உருவங்களும் தென்படுகின்றன. இந்தக் கல்லைப் பூஜிப்பதால் பாவ வினைகள் நீங்கும் என்பது நம்பிக்கை!

அழகிய குத்து விளக்குகள், ஆராதனைத் தட்டுகள், பஞ்ச ஆரத்திகள், மனைகள், மணிகள், ஊது சங்குகள் இவையெல்லாம் கண்ணுக்கு விருந்தாய் உள்ளன.

கண்ணாடி வேலைப்பாடுகள் கொண்ட மண்டபங்கள், கும்பங்கள், முதலானவையும், மைசூரிலிருந்து வந்துள்ள ரோஸ்வுட்டினால் ஆன மண்டபங்களும், ராஜஸ்தானிலிருந்து வந்துள்ள ஒயிட் மெட்டலில் ஆன மண்டபங்களும் மனத்தில் இடம்பெறுகின்ற கலைப் பொருள்களாகும்.

சென்னை நகரில் காதிபவன் சார்பில் முதன் முதலாக இந்த தெய்வீகப் பூஜைப் பொருட்கள் கண்காட்சி நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. இந்தக் கண்காட்சி மே மாதம் 18-ந் தேதி வரை நடக்கிறது.

பல மாநிலங்களில் உருவான கலைப் பொருள்களையெல்லாம் ஒரே இடத்தில் பார்க்கிறபோது தெய்வீக உணர்வும், ஒருமைப்பாட்டு உணர்வும் மேலோங்கி நிற்கிறது!

–பி.வி.ஜி.

---

## அட்டைப்படவிளக்கம்


**முதலாம் அட்டை:**

**வண்ண ஓவியம்**
**திரு வி.எஸ். சதீஸ்குமார்**
**அரசு கலைத் தொழில் கல்லூரி, சென்னை**

**இரண்டாம் அட்டை:**

**புகைப்படம்:**
**திரு என். அனந்தகிருஷ்ணன்**

**நான்காம் அட்டை:**




1. காந்திமண்டபம், கன்னியாகுமரி
2. மாமல்லபுரக் கற்கோவில்
3. அருள்மிகு மீனாட்சி அம்மன் ஆலயம், மதுரை
4. உதகை எழில்மிகு காட்சி
5. விவேகானந்தர் பாறை, கன்னியாகுமரி
6. அருள்மிகு தாயுமான சுவாமி திருக்கோயில் மலைக்கோட்டை, திருச்சி
7. அருள்மிகு சுப்பிரமணியர் திருக்கோயில், திருப்பரங்குன்றம்

**படங்கள் உதவி: சுற்றுலாத்துறை**



தருமபுரி மாவட்டம் கிருஷ்ண கிரியில் உள்ள அரசு அருங் காட்சியகத்தில் காப்பாட்சிய ராகப் பணியாற்றிவரும் திரு ப.காசிலிங்கம் அம்மாவட்டத் தில் வாழ்கின்ற மலையின மக்களான இருளர்களின் இயற்கையோடு இயைந்த வாழ்வை இக்கட்டுரையில் விளக்குகிறார்.

### தருமபுரி மாவட்டத்தில் மலைவாழ் மக்கள்:

# இயற்கையோடு இயைந்த இருளர்களின் இனிய வாழ்வு

**ப. காசிலிங்கம்**

தருமபுரி மாவட்டம் 1965-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் இரண்டாம் நாள் முதல் தனி மாவட்டமாகச் செயல்படத் தொடங்கியது. இம்மாவட்டத்தில் 10 வட்டங்கள் தற்சமயம் உள்ளன. இம்மாவட்டத்தில் பல்வேறு வகையான இன, மத, மொழி பேசும் மக்கள் ஒன்றாகக் கூடி வாழ்கின்றனர்.

**மலைப்பகுதி அதிகம் மலைவாழ் மக்களும் அதிகம்**

இம்மாவட்டத்தைச் சுற்றி மலைகள் ஏராளமாக உள்ளன. இதன் காரணமாக இங்கு குளிர் மிகவும் அதிகம். அதேசமயத்தில் மழை குறைவு. இருந்தாலும் இருக்கின்ற நீரை வைத்து மக்கள் பயிர்த் தொழிலில் அதிகம் ஈடுபட்டுள்ளனர். இம்மாவட்டத் தில் தென்பெண்ணை ஆறு, காவிரி மற்றும் சிற்றாறுகள் உள்ளன.

தருமபுரி மாவட்டத்தைச் சுற்றி மலைப்பகுதி அதிகமாக இருப்பதால் மலைவாழ் மக்கள் இங்கு அதிகம் வாழ முடிகிறது. இம்மாவட்டத்தில் குறும்பர்கள், இலம்பாடிகள், இருளர்கள் வாழ் கின்றனர். இம்மக்கள் கிருட்டிண கிரி, அரூர், ஊத்தங்கரை, பாலக்கோடு, பென்னாகரம், ஓசூர், தேன்கனிக்கோட்டை ஆகிய வட்டங்களில் பரவலாக வாழ்ந்து வருகின்றனர்.


சில மாதங்களுக்கு முன்னர், கிருட்டிணகிரி வட்டத்தில் பனக்கமுட்லு இருளர் வாழும் பகுதிக்குப் பயணம் மேற் கொண்டு அவர்களின் சமூக, பொருளாதார வாழ்க்கை ஆய்வு செய்யப்பட்டது. அவர்களின் கைவினை அரும்பொருள்கள் கிருட்டிணகிரி மற்றும் சென்னை அருங்காட்சியகங்களின் கண் காட்சிக்காகச் சேகரிக்கப்பட்டன.

**தொட்டியம்மன் மலையடிவாரம் இருளர்களின் இனிய வாசம்**

இக்கிராமம் காவேரிப் பட்டினம் தொகுதியில் உள்ளது. காவேரிப்பட்டினத்திலிருந்து 8 கி.மீ. தூரத்திலுள்ள 'தொட்டி யம்மன் மலை' என்ற மலையடி வாரத்தில் இவர்கள் தற்சமயம் வசித்துவருகின்றனர்.

இக்கிராமத்தில் சுமார் மொத்தம் 43 குடும்பங்கள், 30 குடிசைகளில் வாழ்ந்து

வருகின்றனர். முன்பு மலைச் சரிவுகளில் வாழ்ந்துவந்த இவர்கள், வனச் செடிகள் அங்கு வைக்கப்பட்டதால் நிலப்ப ரப்புக்கு வந்து குடிசை போட்டு வாழ்கின்றனர். இருளர்கள் ஒருவனுக்கு ஒருத்தி என்ற அடிப்படையில் திருமணம் செய்துகொண்டு வாழ்கின்றனர். பலதார மணம் இல்லை. மணமகன் இறந்துவிட்டால் மறுமணம் செய்துகொள்ளும் வழக்கமுண்டு.




இருளர் தங்களுக்கென ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர். இவர் ஊர்க் கவுண்டர் என அழைக்கப் படுகிறார். இவர் கணவன் மனைவியரின் தகராறைத் தீர்த்து வைக்கிறார். திருமணம் நடக்கும்பொழுது ஊர்க் கவுண்டர் முக்கியப் பொறுப் பேற்று நடத்திவைக்கிறார். பஞ்சாயத்து அந்தக் கிராமத் திலுள்ள பெரும் பாறையிலேயே நடக்கின்றது. அனைவரும் கலந்துகொள்கிறார்கள். இருளர் பெரும்பாலும் தேன் சேகரித்தல், இருளக்கிழங்கு தோண்டுதல், வேட்டையாடுதல் என்பன வற்றை மலைமேல் இருக்கும் பொழுதே தொழிலாகக் கொண்டிருந்தனர்.

**கீரியும் முயலும் முள்ளம் பன்றியும் அணிலும் உணவாகும்**

வேட்டையாடும்பொழுது கீரிப்பிள்ளை, முயல், காட்டெலி, முள்ளம்பன்றி, அணில் ஆகிய வற்றைப் பிடித்து உணவாகவும் சாப்பிடுகின்றனர். பிற நேரங் களில் அவற்றை விற்றும் வாழ்ந்து வருகின்றனர். எலி பிடிக்கும்பொழுது குழி தோண்டி அதில் சட்டி ஒன்றை வைத்து புகைமூட்டிப் பிடிக் கின்றனர். சில சமயங்களில் அணில், கீரிப்பிள்ளை, முயல், முள்ளம்பன்றி ஆகியவற்றைப் பிடிக்க கம்பி வலை மற்றும் நூல் வலைகளைக் கட்டிவைத்துப் பிடிக்கின்றனர். பாம்புகளையும் முன்பு பிடித்துவந்தனர்.

தற்சமயம் இவர்கள் மலையி லிருந்து கீழே வந்து நிலப் பரப்பில் வாழ்வதால் பயிர்த் தொழில் செய்தும், விறகுவெட்டி சேகரித்து விற்றும் தங்கள் வாழ்க்கையை நடத்தி வரு கின்றனர்.

**காட்டு முனியப்பனே கண்கண்ட தெய்வம்**

இவர்கள் காட்டு முனியப் பனைக் குலதெய்வமாகக் கொண்டுள்ளனர். மற்ற இந்துக்கள் பண்டிகைகளான பொங்கல், தீபாவளி ஆகிய வற்றையும் கொண்டாடுகின் றனர்.

இருளர் 'தமிழ்' மொழி யிலேயே பேசுகின்றனர்.

இவர்கள் இறந்தவர்களைப் புதைத்து விடுகின்றனர். இறந்த 11-ஆம் நாள் தலைமகன் மொட்டை அடித்துக்கொள்ள வேண்டும். இறந்தவர்கள் வீட்டிற்கு 11-ஆம் நாள் வரும் உறவினர்கள் அரைப் படி அரிசி, தேங்காய் இவற்றைக் கொண்டு வருவர். இறந்தவர்கள் குடும் பத்திற்கு மட்டும் கோழி அடித்து சாப்பாடு பரிமாறுவர். குடும் பத்தில் ஆண் இறந்து விட்டால் அப்பெண் வெள்ளைச் சேலை உடுத்தவேண்டும். பூ, நகை இவற்றை அணியக் கூடாது.

**வெள்ளெருக்கன் வேரால் பாம்புக் கடிக்கு வைத்தியம்**

இவர்கள் முடிந்த அளவு மருத்துவர் உதவி இல்லாம லேயே நோயைக் குணப்படுத்த முயலுகின்றனர். இயற்கை வைத் திய முறையையே கையாளு கின்றனர். கூடுமரப்பட்டை

என்ற ஒரு பட்டையை அடி பட்டால் தேய்த்துச் சரிசெய்து கொள்ளுகின்றனர். மற்ற நேரங்களில் மருத்துவர்களை நாடுகின்றனர். பாம்புக் கடிக்கு வெள்ளெருக்கன்வேர் கொண்டு வைத்தியம் செய்கின்றனர்.

இக்கிராமத்தில் வசிக்கும் இருளர் மாணவர்கள் இங்குள்ள ஆரம்பப்பள்ளியில் 15 பேரும், காவேரிபட்டினத்திலுள்ள அரசு உயர்நிலைப்பள்ளியில் 8 பேரும் அரசு மானியத்தில் படிக்கின்றனர். அரசுப் பணியில் இன்னும் யாருமில்லை.

**மாலையிட்டுத் தேன் அறுக்கும் அண்ணன்மாரும் தம்பிமாரும்**

இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கவும், மலை மக்களாகிய இருளர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டித் தரவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முக்கியமாக இருளர்கள் மலைவாழ் மக்கள் எனச் சான்றிதழ் இவ்வட்டத்தில் தான் முதன் முதலாகக் கொடுக்கப் பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கதாகும். அரசு மானியம் மற்றும் கடன் வழங்குதல் ஆகியவற்றில் இவர்களுக்கு முன்னுரிமை தரப்படுகிறது. இலவச மின்சாரம் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. இம்மக்கள் தேன் எடுக்கச் செல்லும்போது பாடும் பாடல்களில் சில வரிகள் வருமாறு:

“தேன் அழிக்கப் போறோம்
அண்ணன்மாரே
தேன் அழிக்கப் போறோம்
அண்ணன்மாரே
ஏழு பேரு அண்ணன் மாரே
தேன் அழிக்கப் போறோம்
அண்ணன்மாரே
தேன் அழிச்சி கொடி புடுங்கி
மாலை பின்னலாம்
தம்பி மாரே,
மாலை பின்னி தேங்கல் மலையில்
மாலையிடணும்,
மாலைவிட்டுத்
தேன் அறுக்கப்போகலாம்
தம்பி மாரே”

இம்மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட அரும்பொருள்கள் விரைவில் கிருட்டிணகிரி அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. ☹

# ‘மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டும் அம்மா!’

**வாழ்க்கை என்னும் வானத்திலே ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சுவது பெண் என்னும் ஞாயிறுதான். அந்த ஞாயிறு இல்லையேல், வாழ்வு வறண்ட பாலைவனமாகும்.**

- வெப்ஸ்டர்

**பெண், கணவனின் அடிமை அல்லள். அவள் அவனுடைய தோழி. அவன் உடலின் பாதி.**

- காந்தியடிகள்

**✷ பெண்களின் நிலை உயர்த்தப் பட்டால் அவர்களுடைய குழந்தைகள் மேலான செயல்களைச் செய்து நாட்டின் பெயரை மகிமைப்படுத்துவார்கள். அப்போது தான் பண்பாடு, கல்வி, ஆற்றல், பக்தி ஆகியவை நாட்டில் மலரும்.**

**✷ மங்கையரின் நிலைமை வளர்ச்சியடைந்தாலன்றி, உலகம் நலம் பெறுவதற்கு வாய்ப்பே இல்லை. பறவை ஒரே ஒரு சிறகைக் கொண்டு பறப்பது என்பது இயலாத காரியம். சமுதாயம் என்ற பறவைக்கு ஆண், பெண் ஆகியோர் இருவரும் இரண்டு சிறகுகள் போன்றவர் ஆவர்.**

**✷ பெண்களுக்குச் சரியான கல்வி புகட்டப்படுமானால் அவர்கள் உலகத்திற்கே மிகச் சிறந்த இலட்சியப் பெண்களாக உருவெடுப்பார்கள்.**

**✷ சமயம், கலைகள், சுகாதாரம் இப்படிப்பட்ட எளிமையான பாடங்களை நமது பெண்களுக்குக் கற்பிக்க வேண்டும்.**

**- சுவாமி விவேகானந்தர்**

**நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. சார்பில் 9 பெண்களும், தி.மு.க. சார்பில் 9 பெண்களும், இப்போது மூன்றாகப் பிரிந்து நிற்கின்ற காங்கிரஸ் கூட்டணி சார்பில் 7 பெண்களும், கம்யூனிஸ்ட் (மார்க்) சார்பில் 5 பெண்களும், ம.தி.மு.க. சார்பில் 5 பெண்களும், பா.ம.க. சார்பில் 3 பெண்களும், பா.ஜ.க. சார்பில் 5 பெண்களும், ஜனதா கட்சி சார்பில் ஒரு பெண்ணும் போட்டியிடுகிறார்கள்.**

# கோபிசெட்டிப்பாளையம் நகராட்சி வளர்ச்சிப் பணிகள்

இந்நகராட்சியில் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன

| முடிவுற்ற பணிகள் | | மதிப்பீடு இலட்சத்தில் (ரூ.) |
|---|---|---|
| 1. | தெருவிளக்கு வசதி அபிவிருத்தி செய்யும் பணி | 6.51 |
| 2. | சாலைப் பணிகள் | 14.48 |
| 3. | வடிகால் கட்டும் பணி | 13.17 |
| 4. | கழிவுகள் அகற்ற லாரிகள் வாங்கும் பணி | 13.44 |
| 5. | பெரியார் மைதானம் அருகே கீரிப்பள்ளத்தின் குறுக்கே பாலம் கட்டும் பணி | 6.50 |
| 6. | குடிநீர் விநியோகம் சீர்படுத்தும் பணி | 15.25 |
| 7. | ஈரோடு - சத்தி சாலையின் இருபுறமும் குடிநீர் விநியோகக் குழாய் அமைக்கும் பணி | 15.00 |
| **நடைபெற்றுக் கொண்டுள்ள பணிகள்** | | |
| 1. | பேருந்து நிலையத்தில் பயணிகள் தங்குமிடம் மற்றும் பேருந்து நிற்குமிடம் கட்டுதல் | 6.63 |
| 2. | பேருந்து நிலையத்தில் கடைகள் மற்றும் உறைவிடங்கள் கட்டுதல் | 13.22 |
| 3. | பழைய பேருந்து நிலையத்தில் இரு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் மற்றும் வணிக மையம் கட்டுதல் | 58.11 |
| **துவக்கப்பட உள்ள பணிகள்** | | |
| 4. | பழைய லாரி நிலையத்தில் கடைகள் வளாகம் கட்டுதல் | 9.44 |
| | மொத்தம் | 171.75 |

**1995-96 வருடத்தில் அரசு மானியத்தில் நடைபெற்று வரும் பணிகள்**

| | | |
|---|---|---|
| 1. | சிறப்பு மானியத்தில் சாலைப் பணிகள் | 25.00 |
| 2. | பாதிக்கடன் - பாதி மானியம் திட்டம் | 5.00 |
| 3. | தீவிரப்படுத்தப்பட்ட குடிசைப்பகுதி அபிவிருத்தித் திட்டம் | 3.00 |
| 4. | ஒருங்கிணைந்த பிற்படுத்தப்பட்ட பகுதி அபிவிருத்தித் திட்டம் | 2.00 |
| 5. | மழைநீர் வடிகால் கட்டும் பணிகள் | 5.00 |
| | மொத்தம் | 40.00 |

மேற்கண்ட பணிகள் நடைபெற அனுமதி அளித்து நகர மேம்பாட்டிற்கு வழிவகை செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களுக்கும் மேற்படித் திட்டம் இந்நகருக்கு வர உறுதுணையாக இருந்த மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்நகராட்சி பொதுமக்கள் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**க. இராஜநாயகம்,** எம்.எஸ்சி., எம்.பில்.,
நகராட்சி ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

## அன்பு, பொறுமை, சகிப்புத்தன்மையால்

# மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளின் வாழ்வில் ஒளி விளக்கேற்றிடுவோம்

ஒரு வீட்டில் குழந்தை பிறக்கும் போது குடும்பத்தில் எல்லையில்லா மகிழ்ச்சி ஏற்படுகிறது. எல்லோருக்கும் ஒரே. கொண்டாட்டம். குழந்தை வளர வளர, இளம் பெற்றோர் அதன் ஒவ்வொரு அங்க அசைவு களையும் பார்த்துப் பார்த்து பூரித்துப் போகின்றனர். ஆசைக் கனவுகளும் கூடவே வளர் கின்றன. 'என் குழந்தை வளர்ந்து வருங்காலத்தில் பெரிய கம்ப்யூட்டர் எஞ்சினியராக ஆவானா? உலகம் போற்றும் விளையாட்டு வீரனாகத் திகழ் வானா? என் மகள் ஒரு சிறந்த டாக்டராக வருவாளா? என் றெல்லாம் சிந்தனை சிறகடித்துப் பறக்கிறது.

### குறைகொண்ட குழந்தையால் குமுறுமே தாயின் இதயம்!

குழந்தையின் வருங்காலத்தைப் பற்றி இப்படியெல்லாம் கற்பனை செய்து இன்புறுவது இயற்கைதான். ஆனால், எல்லாக் கனவுகளும் நனவாகிவிடுவ தில்லை. சில குழந்தைகள் வளரும்போது அவற்றின் நடவடிக்கைகளில் ஏதோ குறை இருப்பதை முதல் முதலில் காணும் தாய் திடுக்கிடுகிறாள். குழந்தையின் தசை இயக்கத் திலும் சூழ்நிலைக்கு ஏற்ப நடந்து கொள்ளும் விதத்திலும் குறைகள் இருப்பது தெரிய வருகிறது. தனது குழந்தை இயல்பான முறையில் இல்லை என்பதை உணரும் தாய் பதைபதைக் கிறாள். பயந்து, செய்வதறியாமல் திகைக்கிறாள்.

### துணிவு வேண்டும் துவள வேண்டாம்

தங்களுக்குப் பிறந்தது மன வளர்ச்சி குன்றிய குழந்தை என்பதை இளம் பெற்றோர் அறியும்போது, எதிர்காலம் பற்றி கட்டிய கோட்டைகளெல்லாம் சரிந்து போகின்றன. மன வளர்ச்சி குன்றிய குழந்தையை வாழ்நாள் முழுவதும் கட்டிக் காக்க வேண்டுமே என்ற பெரிய பொறுப்புணர்வு குடும்பத்தில் மிகுந்த மனபாரத்தையும், குழப் பத்தையும் ஏற்படுத்திவிடுகிறது. இந்த அதிர்ச்சியிலிருந்து மீள பல மாதங்கள், ஏன், சில வருடங்கள் கூட ஆகலாம். ஆனால், அதற்காக ஒரேயடியாகத் துவண்டுபோகத் தேவையில்லை.

> **"நமது சமுதாயத்தின் நலிவுற்ற மக்களிடம் எந்த அளவுக்கு அக்கறை காட்டுகிறோமோ அதைக் கொண்டுதான் நமது நாகரிகத்தின் வளர்ச்சியை அளவிட முடியும்"**
>
> **–பேர்ள்'ஸ் பக்.**

### தவறான கருத்துக்களால் தங்கத்தைத்தவிக்கவிடலாமா?

மனவளர்ச்சி குன்றிய குழந்தைக்குச் சரியான பயிற்சி கொடுத்தால், அது தனக்குரிய திறமையை எட்டுவதில் உதவ முடியும் என்பதைப் பெற்றோர் உணர்ந்து கொள்ள வேண்டும். 'மனவளர்ச்சி குன்றிய குழந்தை களுக்கு எந்த திறமையும் கிடையாது; ஆகவே அவர் களுக்குவாய்ப்புக்கொடுத்தாலும் எதையும் கற்றுக்கொள்ள மாட்டார்கள்' என்று சில பெற்றோர் நினைக்கிறார்கள். இது முற்றிலும் தவறான கருத்து. இப்படிப்பட்ட பெற்றோர்க்கும் அவர்களின் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கும் ஆறுதலும் புகலிடமும் அளிக்க திருச்சி அறிவாலயம் போன்ற தனிப் பயிற்சி நிறுவனங்கள் தயாராக இருக்கின்றன.

### மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளி விளக்கு

திருச்சி கைலாசபுரத்தில் உள்ள பாரத மிகுமின் நிறுவன (பெல்) வளாகத்தின் ஊழியர் குடியிருப்புப் பகுதியில் உள்ள ஒரு நர்சரி பள்ளிக்கூடத்தில் மனவளர்ச்சி குன்றிய மூன்று வயது குழந்தை ஒன்றின் பரிதாபத்திற்குரியநிலைமையைத் தொழிற்சாலை நிர்வாகத்தினர்

கண்ணுற்றனர். அந்தக் குழந்தை, மற்றக் குழந்தைகளோடு சேர்ந்து பழகாமல் ஒதுங்கியே இருந்தது. அப்போது, இப்படிப்பட்ட அவல நிலையில் காணப்படும் குழந்தைகளுக்காகத் தனி நிறுவனம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் உள்ளத்தில் உதித்ததின் விளைவாக ஜெர்மனியைச் சேர்ந்த கிறிஸ்டோபெல் பிளிண்டன் மிஷன் என்ற தொண்டு நிறுவனத்தின் உதவியோடு, மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்காக 1977 பிப்ரவரியில் அறிவாலயம் என்ற தனிக் கல்வி நிறுவனம் பெல் நிறுவன வளாகத்தில் ஏற்படுத்தப்பட்டது. இன்று இந்த நிறுவனம், தனது உதவியை நாடி வரும் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் அனைவரின் வாழ்க்கையிலும் விளக்கேற்றி வைக்கும் அளவுக்கு சிறப்பான வளர்ச்சி கண்டிருக்கிறது.

**குறைகளை நீக்கிட முறையான பயிற்சி**

மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு இங்கு மூன்று நிலைகளில் கல்வி கற்பிக்கிறார்கள். முதலாவது, பள்ளிக்கு முந்தைய வயதுக்குரிய வகுப்புகளில் 6 முதல் 8 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். ஆனால் இவர்களது மனவளர்ச்சியின் வயது இரண்டரை முதல் மூன்றரை வயதுதான் என்பது குறிப்பிடத்தக்கது. 8 முதல் 10 வயதுக்கு உட்பட்டவர்கள் மனவளர்ச்சி வயது மூன்றரை முதல் 6 வரை நர்சரி வகுப்புகளிலும், 13 முதல் 15 வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஆரம்ப வகுப்புகளிலும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். அறிவாலயத்தில், குழந்தைகளின் சொந்தத் திறமை, நடைமுறை பழக்க வழக்கங்கள், கல்வி வளர்ச்சி, மற்றவர்களோடு இசைந்து பழகுவது, பொதுமுபோக்கு நடவடிக்கைகள் போன்றவற்றை அபிவிருத்தி செய்வதில் கவனம் செலுத்தப்படுகிறது.

**அறிவுத்திறனை வளப்படுத்தி 'ஐகியூ'வை அதிகமாக்குவோம்**

இயல்பான மனவளர்ச்சி கொண்ட குழந்தைகளின் அறிவுத் திறன் அளவு (ஐ.கியூ) சுமார் 120 என்ற அளவில் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு இந்த ஐ.கியூ. அளவு 70க்கு குறைவாகவே இருக்கும். சில குழந்தைகளுக்கு மனவளர்ச்சிக் குறை இலேசாகவும், சிலருக்கு மிதமாகவும், சிலருக்குக் கடுமையாகவும் இன்னும் சிலருக்கு மிக மோசமாகவும் இருக்கும். இந்தக் குழந்தைகளுக்குத் தக்க பயிற்சி அளித்து, நாளடைவில் தங்கள் குடும்பத்துக்கும் சமுதாயத்துக்கும் சுமையாக இல்லாத

**மனவளர்ச்சி குன்றிய மழலைச் செல்வங்கள்**
**சரியான பயிற்சியால் சந்தன மாலைகள் தயாரிக்கும் காட்சி.**



> **பொறியின்மை**
> **யார்க்கும் பழிஅன்று;**
> **அறிவறிந்து**
> **ஆள்வினை இன்மைபழி**
>
> **–திருவள்ளுவர்**

வகையில் அவர்களது அறிவுத் திறனை முடிந்த அளவுக்கு உயர்த்துவதே அறிவாலயத்தின் குறிக்கோளாகும்.

### இயல்பான வாழ்க்கைக்கு இசைவான பயிற்சிகள் 360

இயல்பான வாழ்க்கை வாழவேண்டுமானால், மன வளர்ச்சி குன்றிய குழந்தைகள் 360 வகையான திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். சுய உதவி, தசை இயக்கம், பேசும் திறன், கல்வி கற்கும் திறன், மற்றவர்களோடு தொடர்பு கொள்ளும் திறன், சரியாகப் புரிந்து கொள்ளும் திறன் ஆகியவை இதில் அடங்கும். இந்தக் குழந்தைகளுக்குத் தேவையான ஆலோசனைகளை அளிப்பதற்காக ஒரு மனநோய் சிகிச்சை நிபுணரும் ஒரு மனவியல் நிபுணரும் அவ்வப்போது அறிவாலயத்திற்கு வருகை தருகின்றனர். மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளில் 80 சதவிகிதம் பேர் பேச்சுத் திறனிலும் குறை உள்ளவர்களாவர். இதன் பொருட்டு, பேச்சு சிகிச்சை நிபுணர் ஒருவரும் அறிவாலயம் குழந்தைகளுக்குப் பயிற்சி அளிப்பது பற்றி ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும் அடிக்கடி ஆலோசனை அளிக்கிறார்.

### தங்களது தேவைகள் யாவும் தாங்களே கவனித்துக் கொள்வர்

மற்ற பள்ளிக்கூடங்களைப் போலவே அறிவாலயத்தில் பயிலும் குழந்தைகளும் தேர்வுகளில் கலந்து கொள்கின்றனர். பல்வேறு கலை, கலாச்சார நிகழ்ச்சிகளிலும் பங்கேற்கின்றனர். ஓவியம் வரைதல், இசை, பேச்சுப்போட்டி, மாறுவேடப் போட்டி, பொம்மை செய்தல் போன்றவற்றில் தேசிய மற்றும் மாநில மட்டங்களில் நடந்த பல்வேறு போட்டிகளில் அறிவாலய மாணவ மாணவியர் கலந்து கொண்டு பற்பல பரிசுகளையும், நற்சான்றிதழ்களையும் பெற்றிருக்கின்றனர். இங்கு பயிற்சி பெற்றுத் தக்க திறன் ஆற்றலை அடையும் குழந்தைகள், வழக்கமான பள்ளிக்கூடங்களிலும் சேர்த்துக் கொள்ளப் படுகிறார்கள். அறிவாலயத்தில் உள்ள மாணவ மாணவியர் விடுதியில் 60 பேர் தங்கியிருக்கின்றனர். சுய தேவைகளை தாங்களே கவனித்துக் கொள்வதற்கு ஏற்ற பயிற்சியை இந்த விடுதியில் அவர்கள் பெறுகின்றனர்.

### துவக்க நிலைப் பயிற்சியும் பெற்றோர்களின் பங்கும்

மனவளர்ச்சி குன்றியவர்கள் சொந்த திறமையைப் படிப்படியாக வளர்த்துக் கொண்டு சமுதாயத்தில் மற்றவர்களோடு இரண்டறக் கலக்க வேண்டுமானால், அவர்கள் ஒருவருக்கும் ஒரு ஆசிரியர் என்ற விகிதத்தில் தக்க கல்விச் சூழலில் பயிற்சி அளிக்க வேண்டும். ஆனால் நமது நாட்டில் அந்தஅளவுக்குச் சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால், ஐந்து மாணவர்களுக்கு ஒரு ஆசிரியரை நியமிப்பது கூட நடைமுறையில் இயலவில்லை. மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் பெற்றோரிடத்தில் காணப்படும் மனித வளத்தைப் பயன்படுத்தி குழந்தைகளுக்குப் பயிற்சி அளிப்பது இந்தப் பிரச்சினையைச் சமாளிப்பதற்கு ஒரு நல்ல தீர்வாகும். தொடக்க நிலைப் பயிற்சி என்று அழைக்கப்படும் இத்திட்டம் இப்போது பிரபலம் அடைந்து வருகிறது.

### வருங்காலம் நலமாக திட்டம் வாழ்நாள் முழுவதும் கவனம்

இந்தத் திட்டத்தின் கீழ், பெற்றோர்கள் மனவளர்ச்சி குன்றிய தங்கள் குழந்தைகளுக்குத் தாங்களேஓரளவுக்குக் கல்வி புகட்டவும், பயிற்சி கொடுக்கவும் சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களும நிபுணர்களும் அவர்களுக்கு அன்றாடம் சொல்லித் தருகின்றனர். பின்னர் இந்தப் பெற்றோர், நாளடைவில் தாங்களே முழுக்க முழுக்க தங்கள் குழந்தைகளுக்குப் பயிற்சி அளிக்கக் கூடிய வகையில் தேர்ச்சி பெற்று

> **'முடியும்' என்ற உணர்வு பிறந்துவிட்டால் போதும்! அதைச் செய்து முடிக்கும் திறமையும் அந்த உணர்விலேயே அடங்கி இருப்பதால் வெற்றி நிச்சயமாகிறது.**
>
> **–ஜேம்ஸ் ஆலன்**

விடுகின்றனர். ஒவ்வொரு குழந்தையின் தனிப்பட்ட குறையையும் பற்றி பெற்றோருக்கு எடுத்துரைத்து வாழ்நாள் முழுவதும் மேற்கொள்ள வேண்டிய கவனம், வருங் காலத்தைச் சரியானபடி திட்டமிடுவது போன்றவை இத்திட்டத்தின் கீழ் போதிக்கப்படுகின்றன.

**பெற்றோர்கள் மற்றோருக்குக் கற்றுக் கொடுக்கலாம்**

இந்தப் பயிற்சியை இயன்ற விரைவில், அதாவது குழந்தைக்கு இரண்டு வயது முடியுமுன்னரே துவக்கிவிடுவது நல்லது. இத்தகைய துவக்க நிலைப் பயிற்சிகள் மிகவும் பயனுள்ளவையாகவும் குழந்தைகளிடத்தில் நீடித்த நல் விளைவுகளை ஏற்படுத்துபவையாகவும் இருக்கின்றன என்பது பல ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது. இதனால் குழந்தையின் ஐ.கியூ அளவும் அதிகரிக்கிறது. இரண்டு வயதுக்கு உட்பட்டக் குழந்தைகள் வீட்டுக்கு வெளியே சென்று கல்வி பயில முடியாது என்பதால், தனிப்பயிற்சி பெற்ற தாய், மனவளர்ச்சி குன்றிய தன் குழந்தைக்கு வீட்டுச் சூழலிலேயே, புலனறிவு, தசை இயக்கம், பேச்சு, மொழிப் பயிற்சி தனக்குத்தானே உதவி போன்ற பல்வேறு துறைகளில் நல்ல பயிற்சி கொடுக்க முடிகிறது. இப்படி ஒரு குழந்தைக்குப் பயிற்சி கொடுப்பதில் தேர்ச்சி அடைந்து விட்ட பெற்றோர், தங்களைப் போன்ற நிலையில் இருக்கும் மற்ற பெற்றோருக்கும் இத்தகைய பயிற்சியைக் கற்றுக் கொடுக்க இயலும்.

**ஊனம் என்பது ஒரு**
**குறையல்ல**
**உயர்வுக்கு வானம்**
**எல்லையுமல்ல**
**–கவிஞர் இளந்தேவன்**

**ஆசிரியர்களின் பங்கு - பணி அன்பு - பொறுமை - சகிப்புத்தன்மை**

மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்குப் பயிற்சி அளிக்கும் ஆசிரியர்களுக்கு மிகுந்த பொறுமையும் சகிப்புத் தன்மையும் வேண்டும். இந்த அப்பாவிக் குழந்தைகள் ஒவ்வொருவரையும் தனித் தனியாகக் கவனித்து அவர்கள் மீது அன்பு செலுத்த வேண்டும். அவர்கள் காட்டும் அர்ப்பண உணர்வும், கடமைப் பற்றும் பாராட்டுக்குரியது. ஆனால், இவ்வளவு கடினமான பணிக்காக அவர்களுக்குக் கிடைப்பது சொற்ப சமபளம்தான். சாதாரணமாக மாதம் 350 ரூபாயிலிருந்து 1,500 ரூபாய் வரைதான் சம்பளம் பெறுகிறார்கள். எனினும் மனிதாபிமானத்துடன் ஒரு கடமை உணர்வோடு அவர்கள் தொண்டு செய்து வருகிறார்கள்.

**கைதேர்ந்த வல்லுநராய் பயிற்சியால் பரிமளிப்பர்**

மனவளர்ச்சி குன்றியவர்களுக்குச் சரியானபடி பயிற்சி கொடுத்தால், மற்றவர்கள் எளிதில் சலித்துப் போகக் கூடிய பல துறைகளில் இவர்கள் கைதேர்ந்த வேலையாட்களாகப் பரிமளிப்பார்கள். அறிவாலயத்தில் பயிற்சி பெற்ற மாணவ மாணவியரில் பலர் இப்போது வளர்ந்து பெரியவர்களாகி விட்டதால், இவர்களுக்கென்று 10 இலட்சம் ரூபாய் செலவில் தனியாகப் பட்டறை ஒன்றை அமைக்க அறிவாலயம் திட்டமிட்டிருக்கிறது. இங்கு அவர்களுக்கு இலேசுரக பொறியியல் பொருட்களைச் செய்வதற்கும் உபயோகிப்பாளர் பண்டங்களைத் தயாரிப்பதற்கும் பயிற்சி கொடுக்கப்படும்.

**மனவளர்ச்சி குன்றியோருக்குச் சமுதாயம் கைகொடுக்கட்டும்**

மனவளர்ச்சிக் குறைவை மனநோயாகக் கருதிவிடக் கூடாது. எந்த ஒரு தம்பதிக்கும் மனவளர்ச்சி குன்றிய குழந்தை பிறக்கக்கூடும். உலகில் மனவளர்ச்சி குன்றியவர்கள் 25 கோடி பேர் இருக்கிறார்கள். இதில் இந்தியாவின் பங்கு 1 கோடியே 72 இலட்சம், மனவளர்ச்சி குன்றியவர்களுக்கு தக்கபடி கல்வி கற்பித்து, பயிற்சி அளித்து வேலையிலும் அமர்த்த முடியும். அவர்கள் நமது அன்புக்குரியவர்கள் நம்மை அன்புடன் நேசிக்கக் கூடியவர்கள். சமுதாயம் அவர்களை உதாசீனப் படுத்தக் கூடாது; உதறித்தள்ள முடியாது! அவர்கள் ஓரளவுக்கு குடும்ப வாழ்க்கையையும் நடத்த இயலும், பயனுள்ள குடிமக்களாகவும் விளங்க முடியும். அதற்கு உறுதுணையாக நின்று உதவ வேண்டியது ஒவ்வொருவரின் கடமை ஆகும்.

**–ஜோசப் சந்திரகுமார்**



# பாரதி கனவு நனவாகும்

**- முனைவர் இராதா தியாகராசன்**

**பெ**ண்ணின் பெருமைகளைப் பார்க்கும்போது 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்று கூறினார் வள்ளுவர். பெண்களின் மாண்பைப் பண்டைக் காலத்தில் மாமன்னர்கள் மதித்துப் போற்றினார்கள். செயற் பெருமையாலும், உளப் பெருமையாலும் ஏற்றம் பெற்ற பெண்மையைத் தெய்வம் என்று மதித்துப் போற்றி வந்த நாடு நம் தமிழ்நாடு.

கற்புக் கடம் பூண்ட பொற்புடைத் தெய்வம் என்று போற்றப்பட்ட கண்ணகியையும், நற்பெரும் தெய்வம் என்று நாயன்மார்களால் பாராட்டப் பட்ட புனிதவதியாரையும் பெற்ற நாடு நம் நாடு. அதுமட்டுமல்ல செங்கோல் வழுவிய பாண்டிய, நெடுஞ்செழிய மன்னன் முன் நின்று, அஞ்சாது வழக்குரைத்த கண்ணகியின் பெருமை... மணிமேகலை அரசமாதேவிக்கு அறவுரை பகர்ந்து சிறைக் கோட்டத்தை அறக் கோட்டமாக்கிய பெருமை... இலக்கியம் காட்டும் வீரப் பெண்களின் பெருமை எல்லாம் சொல்லி முடியாது!

**களச் சாவு**

தமிழினத்துப் பெண்கள் தலைசிறந்த வீரத்தைப் பார்க்கும்போது முதல் நாள் போரில் தன் தந்தை இறக்க, மறுநாள் போரில் கணவன் இறக்க போர்க்கோலம் புனைந்து 'வேல் பிடித்துச் செல்' எனத் தன் ஒரே மகனையும் அனுப்பினாள் ஒரு தாய். ஒரு மகனை செருமுகம் காட்டி செல் என விடுத்தாள்.

அந்தப் போர்க்களத்தைக் காட்டி நீ செல் என விடுக்கிறாள்.

இதுமட்டுமா? ஒரு தாய் தன் மகன் போர்க்களத்தில் புறமுதுகு காட்டி ஓடினான் என்று யாரோ சொன்னதைக் கேட்டு, நானே சென்று இந்த உண்மையைப் பார்க்கிறேன் என்ற துணிவுடன் அந்தத் தாய் போர்க்களம் செல்கிறாள். போர்க்களத்திற்குச் சென்று பார்க்கும்போது தன் மகன் நெஞ்சில் வேல் பாய்ந்து மடிந்து கிடப்பதைப் பார்த்து மகிழ்ச்சியுற்றாள்.

அவன் புறமுதுகு காட்டி மாண்டிருந்தால் அந்த வேல் அவன் முதுகில் அல்லவா பாய்ந்திருக்கும்? அவன் வீரர்களுடன் எதிர் நின்று போராடியிருக்கிறான். ஆகவே, அந்த வேல் அவன் நெஞ்சில் பாய்ந்திருக்கிறது என்று மகிழ்ந்து அவனைப் பெற்ற காலத்தைவிட மகிழ்ச்சி அடைந்தாள் அந்தத் தாய்!

**இங்கேதான் இருந்தார்கள்!**

இத்தகைய வீரம் படைத்த பெண்ணின் பெருமைகளைப் புறநானூறு மிக அழகாகப் பேசுகிறது!

அதுமட்டுமின்றிப் பெண்பால் புலவர்கள், வீரம் தோன்றப் பாடக்கூடிய திறமையுள்ள பெண்பால் புலவர்கள், வேறெங்கும் இருந்ததாக வரலாறு இல்லை. நேரே போர்க்களம் சென்று பாடல் பாடக்கூடிய பெண் புலவர்கள் நம் தமிழ்நாட்டில்தான் இருந்

திருக்கிறார்கள்!

**ஔவையின் வீர உணர்வு**

இதற்குச் சான்றாக, ஔவையைக் காட்டலாம். தமிழகத்தில் அதியமானை எதிர்த்துப் பகை மன்னர்கள் பெரும் திரளாகப் போர்க்களத்தில் திரண்டபோது, ஔவையார் அந்தப் போர்க்களத்திற்குத் தாமே செல்கிறார்; சென்று, அந்தப் பகைவர்களைப் பார்த்து மனம் நெகிழும்படியாக, அவர்களுடைய நெஞ்சம் நெகிழும்படியாக, அவர்களுடைய மனம் கலங்கும்படியாக அவர்களைப் பார்த்துப் பாடுகிறார். பல பாடல்கள். அதில் ஒரு பாடலில் ஔவையார் சொல்கிறார். எதிரிகளைப் பார்த்து சொல்கிறார்.

அதாவது நாள் ஒன்றுக்கு 8 தேர் செய்கின்ற ஒரு தச்சன், அவன் ஒரு மாதம் முழுவதும் முயன்று ஒரு தேர்ச் சக்கரத்தையே செய்தான் என்றால், அந்தச் சக்கரம் எத்தனை வலிமை உடையதாக, எத்தனைத் திண்ணியதாக, எத்தகைய ஆற்றல் பொருந்தியதாக இருக்கவேண்டும்! அது போன்று ஆற்றல், வீரம் படைத்தவன்,திண்மைபடைத்தவன்,என் அதியமான் அரசன், அவனை நீங்கள் எதிர்பார்ப்பதற்குத் துணிந்து இங்கே வந்திருக்கிறீர்களே என்னே உங்கள் மடமை!

களம் விட்டு ஓடுமின்....

பகைவர்களே! களத்தை விட்டு ஓடுமின்! என்று வீரத்துடன் பகைவர்களைப் பார்த்துக் கவிதை பாடுகிறார்.

**எப்படிப் பேச வேண்டும் என்று உங்களுக்குத் தெரியவில்லையென்றால் எப்படிப் பேசாமல் இருப்பது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். அது மிகவும் நல்லது.**

**–மே தாட்**

---

சங்க காலத்தைப் பார்க்கும் போது, 30-க்கும் மேற்பட்ட பெண் புலவர்கள் இருந்திருக்கிறார்கள். இதுபோல் வேறு எந்த நாட்டிலும் இருந்திருக்க முடியாது. தமிழகத்திலும் பிற்காலத்தில் இப்படி இல்லை.

**கண் போன்ற கடமைகள்**

இதையெல்லாம் நினைத்துப் பார்க்கும்போது அதாவது பெண்ணினுடைய பெருமை, பெண்ணினுடைய கல்வி, இந்தப் பெரும் சான்றுகள் எல்லாம் அவள் எத்தகைய கல்வி உடையவளாக இருந்திருக்கிறாள், எத்தகைய அறிவுடையவளாக இருந்திருக்கிறாள், எத்தகைய வீரம் படைத்தவளாக இருந்திருக்கிறாள் என்பதை நமக்கு நன்றாக உள்ளங்கை நெல்லிக் கனி போலக் காட்டுகிறது.

அதுமட்டுமல்ல, ஒரு இளைஞனுக்குத் தாய், தந்தை, அரசன், சமுதாயம் ஆகியோர் என்னென்ன கடமைகள் செய்ய வேண்டும் என்பதைப் பொன் முடியார் என்ற பெருமாட்டி அழகாகக் கூறியிருக்கிறார். அந்தக் கவி நம்மில் பலருக்கும் தெரியும்.

ஈன்று புறந்தருதல் என்தலைக்
கடனே,
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக்
கடனே,
வேல் வடித்துக் கொடுத்தல்
கொல்லர்க்குக் கடனே,
எல்லாவிதச்சான்றான்மையையும்
அமைத்துக் கொடுப்பது
அரசனுக்குக் கடனே...

—என்று ஓர் இளைஞருக்கு எவ்வாறு ஒரு சமுதாயமும், அரசனும், தாயும், தந்தையும் சிறப்புச் செய்ய வேண்டும், அவர்களது கடமைகள் என்ன என்று அழகாக அந்தப் பொன்முடியார் கூறுகிறார். இதிலிருந்தே அந்தப் பெண் எவ்வளவு சமுதாய உணர்வு உள்ளவளாக இருந்திருக்கிறார் என்பது நன்றாகத் தெரியும்.

எத்தகைய வீரம் படைத்த பெண் இனம் பாருங்கள்! பெண்ணினுடைய வீரத்தை இன்னும் இப்படிச் சொல்லி அடுக்கிக் கொண்டே செல்லலாம்.

ஆனால், இத்தகைய வீரம் படைத்த பெண்ணினம் சமுதாயத்தில் ஏற்பட்ட சில மாறுபாடுகளால், அந்தப் பெண் இனத்தின் பெருமை இடைக் காலத்தில் சிறிது சரிந்தது.

அடுப்பு ஊதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு என்பது போன்ற நச்சுக் கொள்கைகள் தோன்றி, பெண் இனத்தின் பெருமையை அவளது ஆற்றலை, அவளது வீரத்தை, சிறிது சரியச் செய்தது. குன்றச் செய்தது.

ஆனால், நல்ல செயல் ஆற்றலும். தெளிந்த உணர்வும் உடைய ராஜாராம் மோகன்ராய், பாரதியார், காந்தியடிகள் போன்ற பேரறிஞர்கள் தோன்றி, அந்நிலை மாறப் பாடுபட்டனர். நம் நாட்டுப் பெண்கள் இது போல் வீரம் குன்றி, அறிவார்ந்த

பெண்கள், இடுப்பொடிந்து மனையகத்தே ஒடுங்கி மடங்கிக் கிடப்பது அழகல்ல. அறன் அல்ல என்று உலகம் தெரியுமாறு எடுத்துக் கூறினார்.

### அன்றும் இன்றும்

அடுப்படியில் இடுப்பொடிய ஒடுங்கிக் கிடக்கும் பெண் களுக்கும் அன்னையின் அடிமைத் தளையை நீக்கும் ஆற்றல் உண்டு. அறிவுண்டு, உரிமை உண்டு, திறமை உண்டு என்பதை இந்தச் சீர்திருத்தச் செம்மல்கள் உலகறிய எடுத்துரைத்தார்கள். காந்தி அடிகளின் தலைமையில் அந்தப் பெண் படை ஒன்று சேர்ந்தது. அறப்போர் வென்றது. அடிமைத்தளை நீங்கியது. சமுதாயம் மிகவும் வெளிச்சம் பெற்றது. போர்ப்பறை கேட்டு ஆர்ப்பரித்தெழுந்த மகளிர் வீரவரலாறு இலக்கியம் காட்டும் பழைய நிகழ்ச்சி. ஆனால், பெண்கள் பெருமை, அவர் களுடைய வீரச் செயல் இன்றும், நிகழ் காலத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கிற செயலாக நமது பாரத அன்னையின் அடிமைத் தளையை நீக்கிவிட்டது. புதியதாக நிகழ்காலத்தினுடைய நிகழ்ச்சியாக இன்று நாம் ஒவ்வொரு புதுப்புதுச்செயல்கள் நடைபெற்றுக் கொண்டிருப் பதைக் காண்கிறோம்.

அன்று வீரம் படைத்த பெண்கள், பாரதத்திற்குச் சுதந்திரம் தேடிக் கொடுத்த பெண்கள், போராட்டத்தில் ஈடுபட்ட அந்தப் பெண்கள் இன்று ஒரு வாழ்வியல் போராட்டத்திற்குத் தயாராக இருக்கிறார்கள். அதைத் தொட்டுக் காட்டினார்கள். பலபேர். அவர்கள் இன்னொரு வாழ் வியல் போராட்டத்திற்குத் தயாராக நிற்கிறார்கள். வாழ்வியல் போராட்டத்தில், அந்த உணர்வுதான், அந்த எழுச்சிதான் இன்று அவர்கள் கூறிய பெண்ணியலாக Feminism-ஆக மலர்ந்திருக்கிறது.

### ஆண் ஆதிக்கம்

பெண்ணியம் என்று சொல்லும்போது, அந்த உரிமைக் குரல் ஆண்களை எதிர்ப்பதே அல்ல. ஆண் ஆதிக் கத்தைத்தான் அந்தப் பெண்ணியம் எதிர்கிறதே தவிர, பெண்ணியம் ஆண்களை எதிர்க்கவில்லை.

உலக வரலாற்றை நாம் உற்றுநோக்கும்பொழுது, ஆண் ஆதிக்கம் முதன் முதலாக எவ்வாறு வந்தது என்றால், அவனுடைய உடல் வலிமையைப் பொறுத்து அது வந்தது. பெண்ணினுடைய பெண்மை, அவளுடைய தாய்மை, அவளுடைய இனிமை, அவளுடைய செம்மை ஆகியவற்றைப் பொறுத்து அமைகிறது. இவற்றையெல்லாம் பார்க்கும்போது, உடல் வலிமை உள்ளவனாக இருக்கிறான் ஆண். அதனால்தான் அந்த ஆணின் ஆதிக்கம் முக்காலத் திலிருந்தே வந்தது என்று சரித்திரம் கூறுகிறது.

ஆனால், இன்று காலம் மாறிப்போய்விட்டது. ஏனென்றால், அறிவியல் இன்று சிறந்து வளர்ந்திருக்கிறது.

### அறிவியல் வளர்ச்சி

அறிவியல் நோக்கம், அறிவுத்திறன் இந்த மாதிரி வளர்ந்து கொண்டே இருக்கின்ற ஒரு சமுதாயச் சூழ்நிலையில் பால் வேறுபாட்டுக்கு இடமே இல்லை. ஒரு பாலருக்கு ஆதிக்கம், ஒரு பாலருக்கு இல்லை என்று அறிவியலில் நாம் சொல்ல முடியாது. ஆனால், அவ்வாறு அறிவியல் வளர்ச்சி இருந்தும் கூட ஏன் இன்னும் பெண்ணியம் வளரவில்லை? ஏன் இந்த ஆண் ஆதிக்கம் நடக்கிறது? என்று கேட்டால் அதற்கு மனிதம்- Human என்ற பண்பியலையும் இந்த அறிவியலோடு ஒத்து வளர்க்காததுதான் காரணம் என்று நான் கூற முடியும்.

ஆணும் பெண்ணும் ஒத்த உரிமையுடன், 'நாட்டைக் காப்பது ஆண், வீட்டைக் காப்பது பெண்' என்ற நிலைமை மாறி, இருவரும் ஒத்து நாட்டையும், வீட்டையும் பார்க்க வேண்டும். பெண்ணுடைய உளவியலையும், தாய்மைப் பண்பையும், நன்கு உணர்ந்து இருவரும் சேர்ந்து அந்த் மனையியலின் மாட்சியை உணர்ந்து நாட்டுக்குச் செய்ய வேண்டிய பொறுப்புகளையும் உணர்ந்து ஒரு சமநிலை- equilibrium என்ற இந்தச் சமுதாயத்தின் நிலையை உயர்த்தத்தான் நாம் வழிவகுக்க வேண்டும்.

---

**கோழைகளாய் நூறு முறை பிறவியெடுத்து வாழ்வதைக் காட்டிலும் வீரத்துடன் விளங் கினோம் என்று பெருமிதம் கொள்ளும் வகையில் வாழ் கின்ற ஒரு பிறவியே போது மானது.**

**—நெப்போலியன்**

ஆகையால், பெண் உரிமை நமது பிறப்புரிமை என்று கூறுவதில் தவறில்லை.

ஆனால், ஆணும் பெண்ணும் ஒருங்கிணைந்து அந்த நோக்கும் போக்கும் சமநிலை பெற்று இருக்கக்கூடிய ஒரு செயல் பாட்டை எவ்வாறு உருவாக்குவது? அத்தகைய ஒரு சமுதாய நிலை மையை எப்படி உருவாக்குவது?

அதற்கான பரிந்துரைகளை அனைவரும் தாருங்கள். அதனடிப்படையில் நாம் நல்ல சமநிலையை எதிர்பார்க்கலாம். இந்தச் சமுதாயத்தில் இருக்கின்ற கொடுமைகள், தீய செயல்கள் வரதட்சணை போன்ற கொடுமைகள் இன்னும் ஒழிந்தபாடில்லை.

சில குடும்பங்களில் இன்று விளக்கு எரியவில்லை. ஆனால், குடும்ப விளக்கே எரிகின்றது! அந்த நிலைமைதான் இன்று வரதட்சணையினால் இருந்து வருகிறது. குடும்ப விளக்கு எரிகிறது என்றால், மருமகளே எரிந்து போகிறாள். வட நாடுகளில் வரதட்சணைக் கொடுமையால் இன்று நடப்பது எல்லாம் இதுதான்.

**கவசம் போன்ற சட்ட திட்டங்கள்**

மகளிர் நலம்பெற இந்தச் சட்டங்கள் நன்றாக அமைக்கப்பட வேண்டும். பெண்மைக்கு, பெண் உரிமைக்கு நிறைய சட்டங்களை நாம் வகுக்கவேண்டும். ஆனால், சட்டங்களை நீங்கள் கவசங் களாகப் பயன்படுத்தலாமே தவிர, அதை உறவுகளை முறிக்கும் கத்தியாகப் பயன் படுத்தக் கூடாது.

இத்தகைய எண்ணங்களை எல்லாம் மனதில் கொண்டு சமுதாயத்தில் பெண்களுக்கு நடக்கின்ற கொடுமை, பெண் மேல் மேற்கொள்ளப்படுகின்ற கொடுமைக்கு என்ன காரணம் என்பதையெல்லாம் ஆராய்ந் தாக வேண்டும். அப்போதுதான் பெண்ணினம் பற்றிப் பாரதி கண்ட கனவு நனவாகும்!

# கவிதையும் கவிஞர்களும்

★ எல்லா மனிதர்களும் இதயத்தால் கவிஞர்களே!

—எமர்சன்

★ உள்ளத்தில் உள்ளது கவிதை - இன்பம் உருவெடுப்பது கவிதை!

—கவிமணி
தேசிக்விநாயகம் பிள்ளை

★ புதுக்கவிதை எழுதுவோர் பேனாவில் எவ்வளவு மை இருக்கிறதோ, அவ்வளவு தண்ணீரும் கலக்கப்பட்டிருக்கிறது!

—கதே

★ பொய் சொல்ல உரிமம் பெற்றவர்களே கவிஞர்கள்!

—பிளினி

★ நீதிக்கும் அரசியல் விஞ்ஞானத்திற்கும் உறுதுணை போன்றதே கவிதை என்பது என் கருத்து.

—ஷெல்லி

★ இசைச் சிந்தனையே கவிதையாகும்.

—கார்லைல்

★ 'பாட்டினைப்போல் ஆச்சரியம் பாரின்மிசை இல்லையடா!'

—மகாகவி பாரதியார்

★ எல்லா நாடுகளையும் சேர்ந்த பெருங் கவிஞர்களுக்குச் சிறப்புத் தருவது அவர்களிடம் நிறைந்துள்ள நாட்டுணர்வு அல்ல; உலக உணர்வேயாகும்!

—லாங்ஃபெல்லோ

★ 'எத்தனையோ இன்பம் இந்த
நாட்டிலே உண்டு;
அத்தனைக்கும் பெரிய இன்பம்
பாட்டிலே உண்டு!'

—பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

தொகுப்பு: ராஜு


# 1100 ஆண்டுகட்கு முற்பட்ட பல்லவர் கால முருகன் சிலை

தமிழ்நாடு அரசு தொல் பொருளாய்வுத் துறை, சென்னை அயனாவரத்தில் உள்ள பரசு ராமலிங்கேஸ்வரர் கோயிலில் பல்லவர் காலத்து மிக அழகிய முருகன் சிலையொன்று இருப் பதைக் கண்டறிந்துள்ளது.

செவ்வக பீடத்தின் மீது நேராக நின்ற நிலையில், மேல் வலக்கரத்தில் அக்கமாலையும், மேல் இடக்கரத்தில் கமண்டலத் தையும் ஏந்திய மாறுபட்ட நிலையில் வடிக்கப்பட்ட ஒன்ப தாம் நூற்றாண்டைச் சார்ந்த சிலை இது. பொதுவாகப் பிற் கால முருகன் சிலைகளில், வலக் கரத்தில் வஜ்ரமும், இடக்கரத்தில் சக்தியும் காட்டப்படுவதே வழக்கம். கீழ் இரு கரங்களும் அபய, வரத முத்திரைகள் காட்டப்பட்டிருக்கும்.

இவ்வடிவில், அக்கமாலையும், கமண்டலமும் இருப்பது மிக அரிதான ஒன்றாகும். வலக்கரம் அபயத்திலும், இடக்கரம் தொடைமீது வைத்த நிலையிலும் உள்ளது. தடித்த கன்னிமாலையை நெற்றியில் சூடி, 'சன்ன வீரத்தினை' மார்பில் பூண்டு, காதிலும் பெரிய பத்ர குண்டலங்களைத் தரித்து முருகன் காட்சியளிக்கிறார்.

இச் சிற்பத்தில் காணப் பெறும் ஆடை, அணிகலன் களின் வடிவமைப்பைக் கருத்தில் கொண்டு, இது திருவொற்றியூர் மற்றும் மாமல்லபுரம் சிற்பங் களை ஒத்த தன்மையுடையது என்றும், பல்லவர் காலத்தில் வடிக்கப் பெற்றிருக்கலாம் என்றும் தொல்பொருள் ஆய்வுத் துறையின் இயக்குநர் திரு. நடனகாசிநாதன் கருத்துத் தெரிவிக்கிறார். சிற்பத்தின் முகம் மட்டும் பிற்காலத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது போன்று தோன்றுகிறது. இது தவிர, பிற உருவ அமைதிகளைக் கொண்டு காண்கையில், இது பல்லவர் காலக் கோயிலின் மாடத்தில் காணப்பெறும் தேவதையாகவோ, அல்லது பல்லவர், சோழர் கால மாற்றத்தின்போது அமைக்கப் பெற்ற கோயிலிலே வணங்கப் பெற்ற சிலையாகவோ இருத்தல் வேண்டும் எனலாம். மைலாப்பூர் கபாலீஸ்வரர் கோயில் குளக்



கரையில் அமைந்த சேட்டையின் சிற்பம், திருவொற்றியூர்க் கோயிலில் உள்ள சில சிற்பங்கள், வேளச்சேரி திருமால் கோயிலில் உள்ள செப்புத் திருமேனி ஆகியவை சென்னை யிலுள்ள பல்லவர் காலத்தைச் சேர்ந்த வேறுசில அழகிய கலைப் படைப்புகள் ஆகும்.

இச்சிற்பம் இடம்பெறும் கோயிலில், ஒரு சிறிய கல்வெட்டு 'அம்முதடுவான் சுரைக் குடையான் நயினான்' என்று எழுதப்பட்டிருப்பதன் மூலம், இக்கோயிலில் நிவேதனத்துக் குரிய உணவினைச் சமைத்தவன் சுரைக்குடையான் நயினான் என்பது பெறப்படுகிறது. கரு வறையின் நிலைக்காலில் பொறிக்கப்பட்டுள்ள இக்கல் வெட்டின் எழுத்தமைதி கி.பி. 14-15-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இதிலிருந்து இக் கோயில் கி.பி. 14-15-ஆம் நூற்றாண்டிலிருந்தே இங் குள்ளது என்பது தெரிய வரு கிறது. இக்கோயிலில் வழிபாட்டி லிருக்கும் இம்முருகன் சிலை யினைக் கொண்டு காண்கையில், பல்லவர் காலத்திலேயே இங்கு ஒரு கோயில் இருந்திருக்கலாம் என்று கருதவும் இடமேற் படுகிறது. எவ்வாறாயினும், பல்லவர் கலைப்படைப்பான இச்சிற்பத்தின் அழகு கண்டு களிக்கத்தக்கது. போற்றி மகிழக் கூடியது.

# "அறிவொளி - தொடர்கல்வி இயக்கம்"

# பெரியார் மாவட்டம், ஈரோடு

"15 வயது முதல் 40 வயதுக்கு உட்பட்டோரில் கல்லாதோரே இல்லை என்ற நிலை உருவாக வேண்டும்" என்ற நமது இலட்சியத்தில் ஓரளவு வெற்றி பெற்றுள்ளோம். இந்த இலட்சியப் பயணம் முழு வெற்றி அடைந்திட தொடர்கல்வி இயக்கம் துவக்கப்பட்டுள்ளது.

☆ கற்போர் தொடர்ந்து கற்க வசதியாக மாவட்டம் முழுவதும் 2,000 தொடர்கல்வி படிப்பகங்கள் அமைக்கப்படவுள்ளன. முதல் கட்டமாக இதுவரை 800 படிப்பகங்கள் மாவட்டம் முழுவதும் துவக்கப்பட்டுள்ளன. இப்படிப்பகங்களில் தினசரி செய்தித்தாள்கள், வார, மாத பத்திரிகைகள், அரசு நலத்திட்டங்களை விளக்கும் நூல்கள், பொது அறிவு நூல்கள் வைக்கப்பட்டுள்ளன. இப்படிப்பகங்களில் கற்போர் கட்டணம் ஏதும் செலுத்தாமல் படித்துப் பயன்பெறலாம். இவை மகளிர் விவாதக்குழு மையங்களாகவும் செயல்படுகின்றன.

☆ அரசு நலத்திட்டங்கள், வளர்ச்சித் திட்டங்கள், தீவிர சுகாதாரத் திட்டங்கள், மகளிர் நலம், ஆரம்பக் கல்வி, மருத்துவம், நுகர்வோர் பாதுகாப்பு, சிறுசேமிப்பு, குடும்ப நலம், சாலைப் பாதுகாப்பு, சட்டக்கல்வி மற்றும் பிற அரசுத் திட்டங்களைக் கற்போருக்கு விளக்கி அதன் மூலம் கற்போர் இத்திட்டங்களில் பங்கேற்று பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

☆ முழு எழுத்தறிவுத் திட்டத்தின் மூலம் கற்றவர் கற்றுக்கொண்டதை மறக்காமல் இருக்கத் தொடர்ந்து படிக்கச் செய்து கற்றக் கல்வியைப் பயன்படுத்திக் கற்போர் தங்கள் வாழ்க்கையை சமூகப் பொருளாதார ரீதியில் உயர்திக் கொள்ள வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

☆ தொடர்கல்வித் திட்டப் பணிகளுக்காக மாவட்டம் முழுவதும் கிராமக் கல்விக் குழுக்கள், ஆலோசனைக் குழுக்கள், இளைஞர் அமைப்புகள், மகளிர் அமைப்புகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

☆ தொடர்கல்வித் திட்டப்பணியில் அரசின் சிறப்புத் திட்டங்களான யுனிசெப், சிடிடி, வாட்சன், சி.பி.சி.எஸ்., டோக்ரா, வி.எல்.ஓ.எம்., ஆகியவற்றுடன் இணைந்து செயல்பட திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

☆ பொதுத்துறை நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், சேவா அமைப்புகள், மகளிர் அமைப்புகள், தொடர்கல்விப் பணியில் இணைந்து செயல்பட திட்டம் தீட்டப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

☆ எழுத்தறிவு, விழிப்புணர்வு பெற்ற கற்போர் மற்றும் மகளிர் தங்கள் வாழ்க்கையில் பொருளாதார மேம்பாடு அடையச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி சிறுதொழில் பயிற்சி மற்றும் கடனுதவி பெற்று பயன்பெற தொடர்கல்வி துணைபுரியும்.

ஒரு மகத்தான மக்கள் இயக்கமாக அறிவொளி இயக்கத்தை மாற்றியது போலவே, தொடர்கல்வி இயக்கத்தையும் மக்கள் இயக்கமாக மாற்றி வெற்றியடையச் செய்ய வேண்டுகிறேன். இதற்கு பொதுமக்களும், சேவை நிறுவனங்களும், தன்னார்வு அமைப்புகளும் ஒத்துழைக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

*கற்பது உரிமை!* *கற்பிப்பது கடமை!*

*அறிவொளி நன்றி!*

அன்புடன்

**நா.ச. பழனியப்பன்,** இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
தலைவர்
பெரியார் மாவட்ட அறிவொளி-
தொடர்கல்வி இயக்கம், ஈரோடு

# செய்திகள்... செய்திகள்... செய்திகள்...

மொழி வளர்ச்சிக்கான எல்லாப் பணிகளையும் மேற்கொள்ளுவதற்கான ஆய்வு மையம் ஒன்றைத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் விரைவில் தொடங்கத் திட்டமிட்டுள்ளது.

○○○

நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தல் நாளுக்கு முந்திய இரு நாட்கள், தேர்தல் நாள், ஓட்டு எண்ணப்படும் நாளுக்கு முந்திய நாள் மற்றும் ஓட்டு எண்ணிக்கை நாட்களை மதுவிலக்கு நாட்களாக அறிவிக்கும்படி மத்திய தேர்தல் ஆணைக்குழு தெரிவித்திருக்கிறது.

○○○

தமிழக நீச்சல் வீராங்கனை நிஷா மில்லட், ஆந்திரத்தின் உலகப் பளுதூக்கும் சாம்பியன் மல்லேஸ்வரி இருவரும் 1995-96-ஆம் ஆண்டின் சிறந்த ஜூனியர் வீராங்கனைகளாகக் கல்கத்தா பத்திரிகையாளர் சங்கம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

○○○

பொதுத் தேர்தலையொட்டி, மே மாதம் 6ஆம் தேதி முதல் நடைபெறவிருந்த தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தேர்வுகள் மே 13 ஆம் தேதிக்குத் தள்ளி வைக்கப்பட்டிருக்கின்றன.

○○○

தமிழகத் தேர்தலில், மக்களவைக்குப் போட்டியிடுபவர்களிலேயே மிகக் குறைந்த வயதுடையவர், காஞ்சிபுரம் வழக்கறிஞரான கே.டி. இராகவன். இவருக்கு வயது 25 ஆண்டு 6 மாதம் மட்டுமே.

○○○

"ஒலிம்பிக்கின் உண்மையான நோக்கம் தற்சமயம் அழிந்து வருகிறது. இப்போதெல்லாம் விளையாட்டுப் போட்டிகள் வியாபாரமாகி வருகின்றன" என்று ஒலிம்பிக் சாம்பியன் லின்போல்டு கிறிஸ்டி கூறியிருக்கிறார்.

○○○

ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 24 ஆம் நாள் தீயணைப்புத் தொண்டு நாளாக அனுசரிக்கப்படுகிறது. ஏன் தெரியுமா? 1944 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் நாள் அன்று, பம்பாய் துறைமுகத்தில் நின்ற ஒரு வெடிமருந்துக் கப்பலில் பிடித்த தீயை அணைக்க மேற்கொண்ட முயற்சியில் ஈடுபட்ட தீயணைப்புப் படையினரும் பணியாளர்களும் மாண்டு போனார்கள்.

○○○

இந்திய விடுதலைப் போராட்டத்தின்போது, பஞ்சாபில் உள்ள ஜாலியன்

வாலாபாக்கில் 1919 இல் அதாவது 77 ஆண்டுகளுக்கு முன்னால் ஜெனரல் டயர் என்ற கொடிய பிரிட்டிஷ் அதிகாரி, ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்களைச் சுட்டுத் தள்ளினான். அதன் நினைவுநாள் 13.4.96 அன்று அமிர்தசரசில் கடைப்பிடிக்கப்பட்டது.

○○○

கிரிக்கெட் வீரர் மனோஜ் பிரபாகர் டில்லி தெற்குத் தொகுதியிலிருந்து தேர்தலில் போட்டியிடுகிறார். அவரை, இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் கபில்தேவ் ஆதரித்துப் பிரச்சாரம் செய்கிறார்.

○○○

வரவிருக்கும் பொதுத்தேர்தலில், தமிழ்நாட்டில் மட்டும் 54,000 வாக்குச் சாவடிகள் இருக்கும் தமிழ்நாட்டில் மொத்தம் 4 கோடியே 24 இலட்சத்து 61 ஆயிரத்து 801 வாக்காளர்கள் இருக்கின்றனர். இதில் பெண் வாக்காளர் எண்ணிக்கை மட்டும் 2 கோடியே 10 இலட்சத்து 71 ஆயிரத்து 456 ஆகும்.

○○○

ஐரோப்பிய வான்வழிக் கூட்டமைப்பைச் சேர்ந்த ஏர்பஸ் நிறுவனம் 500 கோடி பவுண்ட் ஸ்டெர்லிங் செலவில் சூப்பர் ஜம்போ விமானத்தைத் தயாரிக்கத் திட்டமிட்டிருக்கிறது. இதற்காக



சீனா, சிங்கப்பூர், இந்தியா ஆகிய நாடுகளில் உள்ள விமான நிறுவனங்களின் உதவியை இந்த நிறுவனம் நாடியிருக்கிறது. அண்மையில் சீனாவுடனான ஒப்பந்தம் பாரிசில் கையெழுத்தாயிற்று.

○○○

மூளையில் ஏற்படும் கட்டியை அகற்றும் நவீனக் கருவி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் விலை ரூ.12 கோடி. உலகில் இந்தக் கருவி மூன்றே இடங்களில்தான் இருக்கிறது. அதில் ஒன்று புதுடெல்லியில் உள்ள இந்திரபிரஸ்தா அப்போலோ மருத்துவமனையில் இருக்கிறது.

○○○

கொசுவை விரட்ட நாம் பயன்படுத்தும் வில்லைகள், சுருள்கள் போன்றவற்றால் பலவிதமான பக்க விளைவுகள் ஏற்பட இடமுண்டாம். ஆனால், வேப்பெண்ணெய் மூலம் தயாரிக்கப்படும் கிரீம், தைலம் போன்றவற்றால் பாதிப்பில்லை என்கிறார். மலேரியா ஆராய்ச்சி மைய இயக்குநர் வி.பி. சர்மா.


○○○

நடைபெறவிருக்கும் 11வது பொதுத் தேர்தலில் இந்தியா முழுமைக்குமாக மொத்தம் 27 இலட்சத்து 22 ஆயிரம் ஓட்டுப் பெட்டிகள் பயன்படுத்தப்படவிருக்கின்றன. இது சென்ற தேர்தலைவிட 5.5 இலட்சம் அதிகமாகும்.

○○○

இந்தியாவின் தேசிய விளையாட்டு ஆக்கி. ஆஸ்திரேலியாவின் தேசிய விளையாட்டு கிரிக்கெட். அதேபோல், ஆப்கானிஸ்தானின் தேசிய விளையாட்டு குதிரையிலிருந்தபடி விளையாடும் புஸ்காசி என்பதாகும். இது, போலோவைப் போலப் பந்தைப் போட்டு விளையாடுவதல்ல; இறந்துபோன கன்றின் தலையைப்போட்டு விளையாடுவதாகும்!

தொகுப்பு பி.எல்.ஆர்.



# வருங்காலச் சந்ததியினருக்கு ஒரு வரலாற்றுப் பெட்டகம்

**சி**றப்பும், பொறுப்பு மிக்க சட்டப்பேரவை அமைந் துள்ள 'கோட்டை' என்று எல்லோ ராலும் பொதுவாக அழைக்கப் படும், புனித ஜார்ஜ் கோட்டை வரலாற்றுச் சிறப்புப் பெற்ற தாகும். சென்னைக்குப் பெருமை சேர்ப்பதாகும்.

**வசீகர கோட்டை**

எவ்வளவு ஆட்சியாளர் களைக் கண்டுள்ளது; எத்தனை வருடங்களைத் தாண்டியுள்ளது; எவ்வளவோ முக்கியமான சட்டங்கள் இயற்றும் ஒப்பற்ற இடமாக திகழ்ந்துள்ளது; எவ்வளவோ காரசாரமான வாக்குவாதங்களை சுவைத் துள்ளது; எத்தனையோ ஆட்சி களின் மாட்சியையும் வீழ்ச்சி யையும் கண்கூடாகக் கண்டுள்ளது; அவ்வளவையும் கண்டும், கேட்டும், அமைதியாக கம்பீரமாக வரலாற்றுச் சிறப்பின் வசீகரத்தோடு வீற்றிருக்கிறது புனித ஜார்ஜ் கோட்டை.

**உப்புக்காற்று உலாவரும்**

கடலலைகள் வாசலிலே தண்ணீர்த் திவலைகளைத் தூவிட, வீசுகின்ற கடற்காற்று உப்புச்சுவைப் பெற்று உலா வரும் இடமான வங்கக் கடற்கரை விளிம்பில் சென்னை யின் வரலாற்றுக்கு எழிலைச் சேர்க்கும் பொலிவு பெற்ற புனித ஜார்ஜ் கோட்டை அமைந் துள்ளது.

**காப்பரண்**

ஆங்கிலேயர்களால் கட்டப் பட்ட முதல் கோட்டையான கல்கத்தாவிலுள்ள வில்லியம் கோட்டை காலப்போக்கில் சிதைந்துவிட, புனித ஜார்ஜ் கோட்டை என்றென்றும் நின்று நிலைபெற்ற ஒரு கோட்டை யாக இளமை மாறா புத்தெழிலோடு திகழ்ந்து வருகிறது. கடைசிவ்ரை ஆங்கிலேயருக்கும், இடையில் சில காலம் பிரெஞ்சுக்காரர் களுக்கும், இந்திய சுதந்திரத் துக்குப் பின்னர் தமிழ்நாட்டு ஆட்சியாளர்க்கும் காப்பரணாக, ஆட்சிபீடமாக திகழ்ந்து வரு கிறது.

பல நூற்றாண்டுகளாகவே,

நீண்ட இந்திய கடற்கரைமீது மேல் அயல்நாடுகளுக்கு ஒரு 'கண்' உண்டு. உரோமாபுரி, கிரேக்கம், அரேபியா, கதே, டச்சுக்காரர், பிரெஞ்சு நாட்டவர், போர்ச்சுக்கீசியர், ஆங்கிலேயர் இப்படி பலரின் பார்வையும், பாதங்களும் பட்ட பூமி இந்திய மண் என்று வரலாற்றுச் செய்தி பறை சாற்றும்.

கி.பி. 1630-ஆம் ஆண்டு தங்கள் வணிகத்தை வங்கக் கரையோரம் நடத்திவந்த கிழக்கிந்தியக் கம்பெனியினர் தங்களின் வணிகத்தை வளர்க்கும் பொருட்டு ஒரு நிரந்தரமான இருப்பிடத்தைத் தேர்வு செய்ய அலைந்தார்கள்.

முதன்முதலில் இன்றுள்ள சென்னைக்கு அருகேயுள்ள புலிக்காடு என்னுமிடத்தில் கடற்கரையில் ஒரு கோட்டையைக் கட்டினார்கள். ஆனால், அக்கோட்டை இயற்கைச் சீற்றத்தாலும், கழிமுக பிரச்சினையாலும் அவர்களுக்கு ஒத்துவரவில்லை.

எனவே, நிலையான ஒரு கோட்டையை அமைத்திட ஆவலோடு காத்திருந்தனர். இடம் தேர்வு செய்யும் பொறுப்பு பிரான்சிஸ் டே என்பவரிடம் விடப்பட்டது. அவரும் பல இடங்களைக் கண்டு, இறுதியாக மெட்ராஸ்பட்டாம்(Medraspatam) என்ற ஒரு மணற்பாங்கான இடத்தைத் தேர்வு செய்தார். அம்மணல்மேடு கூவம் நதியாலும், வங்கக் கடலாலும் சூழப் பெற்றுக் கோட்டை கட்டுவதற்கான அனைத்துத் தகுதியும் பெற்றிருந்தது.

**மீனவக் குடியிருப்பு**

அந்த இடத்தில் பழைய கட்டுமரங்களும், மீன் பிடிக்கும் வலைகள் காயும் ஓர் மீனவக் குடியிருப்பாகவே இருந்திருக்கிறது. மூன்று மைல் நீளமும், ஒரு மைல் அகலமும் கொண்ட இந்த நிலப்பரப்பை பிரான்சிஸ்டே தேர்ந்தெடுத்தார். அந்நிலத்திற்குச் சொந்தக்காரரான பூனமல்லி ஜமீன்தாரர் சென்னப்பா என்பாரிடமிருந்து ஒரு உடன்படிக்கை வாயிலாக கிழக்கிந்தியக் கம்பெனியினர் பெற்றார்கள். இது கி.பி. 1639-ஆம் வருடம் ஜூலை 22-ம் நாள் நடைபெற்றது. அந்த உடன்படிக்கை என்னவென்றால்,

---

**வெற்றி என்பதெல்லாம் வெறும் அதிர்ஷ்டம் தான்; வேண்டுமென்றால் தோல்வியடைந்த எவனை வேண்டுமானாலும் கேட்டுப் பாருங்களேன்!**

**—வில்சன்**

---

ஜமீன்தாரர் சென்னப்பா மேல் நாட்டிலிருந்து குறிப்பாக அரேபியா நாடுகளிலிருந்து குதிரைகளை இறக்குமதி செய்ய கிழக்கிந்தியக் கம்பெனிகள் உதவ வேண்டும் என்பதேயாகும்.

**பணப் பிரச்சினை**

அந்தச் சிறு நிலத்தில் பிரான்சிஸ் டே என்பவரிடமே கிழக்கிந்தியக் கம்பெனியினர் கோட்டை கட்டும் திட்டப் பணியை ஒப்படைத்தார்கள். ஆனால், பின்னர் அதில் திருப்தியில்லாததால், ஆன்ட்ரூ கோகன் என்பவரை அணுகி டேயுடன் இணைந்து கட்டச் சொல்லியிருக்கிறார்கள். கோட்டைக் கட்டும் பணி தொடர்ச்சியாக நடைபெற பணப் பிரச்சினை ஒரு காரணமாக இருந்திருக்கிறது. சூரத் கோட்டையிலிருந்து 'அவ்வப்போது, உதவி பெற்றே கோட்டை கட்டும்பணி நிறைவடைந்துள்ளது. அவ்வளவு அரும்பாடுபட்டுக் கட்டிய இக்கோட்டை கிழக்கிந்தியக் கம்பெனியினரின் தலையாக கோட்டையாகப் பிற்காலத்தில் திகழ்ந்தது. இக்கோட்டை 1640-ஆம் ஆண்டு ஏப்ரல் 23-ஆம் நாள் கட்டப்பட்டு, அன்று முதல் புனித ஜார்ஜ் கோட்டை பெயரே இன்றும் தொடர்கிறது.

**ஆங்கிலேயரின் ஆட்சிபீடம்**

தொடக்கத்தில் வணிக மேம்பாட்டுக்காக இக்கோட்டை கட்டப்பட்டது என்று கூறப்பட்டாலும் உண்மையில் இராணுவப் படைக்கலன்கள், வைத்துப் பாதுகாக்கும் பல வசதிகளைக் கொண்டு விளங்கி வந்திருக்கிறது. அதாவது கிழக்கிந்தியக் கம்பெனியின் இருப்பிடமாகவும், பின்னர் ஆங்கிலேயரின் ஆட்சி பீடமாகவும் வளர்ந்துள்ளது.

காலப்போக்கில் இக்கோட்டையினுள் பல கட்டடங்கள் சமயச் சார்புச் செயல்களுக்காகவும், பொதுக் காரியங்களுக்கர்கவும் கட்டப்பட்டுள்ளன. ஏறக்குறைய 9 நிலைகளில் கோட்டையின் கட்டட வளர்ச்சி நடைபெற்றுள்ளது என்று கூறப்படுகிறது.

## வரலாற்று மனிதர்கள் வாழ்ந்த கோட்டை

புனித ஜார்ஜ் கோட்டை பல அரசுகளின் ஆட்சியைக் கண்டிருக்கிறது. இன்றும் இது தொடர்கிறது.

வரலாற்றுச் சிறப்புப் பெற்ற சில ஆங்கிலேயர்களான இலிகு யேல், இராபர்ட் கிளைவ், ஜாப்சார்நாக், ஆர்தர் வெல்லஸ்லே, மெக்கன்சி, மன்றோ, வாரன் ஹேஸ்டிங்ஸ் மற்றும் காரன் வாலிஸ் போன்றவர்கள் இக் கோட்டையில் வசித்துள்ளார்கள் அல்லது வந்துபோய் உள்ளார்கள்.

இக்கோட்டையிலுள்ள பல கட்டடங்கள் அக்கால வரலாற்றை சுமந்து கொண்டிருக்கும் வரலாற்று ஆவணங்கள் என்பதில் வியப்பில்லை. இங்குள்ள கட்டடங்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவை ராபர்ட் கிளைவ் வாழ்ந்த கிளைவ் இல்லம், போர் வீரர் குடியிருப்பு வரிசை மற்றும் புனித மேரி மாதா கோவில் முதலியவையாகும்.

கி.பி. 1746-இல் நடந்த கடலூர் போருக்குப் பின்னர், இப் புனித ஜார்ஜ் கோட்டை பிரெஞ்சுக்காரர்களின் கைக்கு மாறியது. மூன்றாண்டுகளுக்குப் பிறகுதான் மீண்டும் ஆங்கிலேயரிடம் திரும்பியது.

## உயரமான கொடிக்கம்பம்

இராபர்ட் கிளைவுக்கு முன்னால், பாஸ்டன் நகரில் பிறந்த யேல் என்பார் ஆளுநராக 1687 முதல் 1692 வரைக்கும் பொறுப்பு வகித்தார். இவருடைய காலத்தில்தான் 1687-ஆம் ஆண்டு, புனித ஜார்ஜ் கோட்டையில், நாட்டிலேயே உயரமான மரத்தாலான கொடிக்கம்பத்தில் கிழக்கிந்தியக் கம்பெனியின் கொடி முதன்முதலில் ஏற்றி வைக்கப்பட்டது. இன்று இந்திய தேசியக் கொடி பட்டொளி வீசி பறக்கிறது.



மரத்தாலான பழைய கொடிக்கம்பம் பழுதடைந்துள்ளது என கண்டுபிடித்ததால் 1995-ஆம் ஆண்டு புதிய கொடி மரம் மாற்றப்பட்டது.

எலிகுயேல் ஆளுநராக இருந்தபோது கோட்டையின் பழையக் கட்டடங்களை இடித்துவிட்டு, அங்கு புதிய மூன்று அடுக்கு கட்டடத்தையும் கட்டினார். அதன் பிறகே, இன்றுள்ள தலைமைச் செயலக பழையக் கட்டடம் கட்டப்பட்டது.

1910-ஆம் ஆண்டு சட்டப் பேரவைக் கட்டடத்தின் இரண்டாவது தளமும் மற்ற அலுவலகங்கள் உள்ள பகுதிகளும் அமைக்கப்பட்டன.

## பல்லாவரத்துக் கற்றூண்கள்

ஜார்ஜ் கோட்டையின் அழகே அதன் ஓங்கியுயர்ந்த தூண்களேயாம். இந்தத் தூண்கள் பல்லாவரத்திலிருந்து கொண்டு வரப்பட்டவை. மொத்தம் உள்ள 32 கற்றூண்களில் 20 கரிய கற்றூண்கள் 1910-ஆம் ஆண்டு நிறுவப்பட்டன.

## சட்டப்பேரவை மாமண்டபம்

வரலாற்றுச் சிறப்புப் பெற்ற அழகிய சட்டப்பேரவை மாமண்டப அறைக்குள் கண்ணைக் கவரும் மரவேலைப்பாடுகளும், கருமையும், வெண்மையும் கலந்து அழகு மிளிரக் காட்சியளிக்கும் கருங்கல் வேலைப்பாடுகளும் நிறைந்துள்ளன.

இந்த மாமண்டபம் பெருமைகள் பல கொண்டது. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலிருந்து இன்று வரை மண்டபத்துள் செல்ல

அனுமதி வரையறுக்கப் பட்டுள்ளது. முன்னர், ஆங்கிலேய அரசால் தேர்ந்தெடுக்கப்பட்ட வர்களும், இன்று வாக்குரிமைப் பெற்றுப்பொதுமக்களால் தேர்ந் தெடுக்கப்பட்டவர்கள் மட்டுமே மண்டபத்துள் சென்று உறுப்பின ருக்கென்று ஒதுக்கப்பட்ட இருக்கைகளில் அமரமுடியும். அவ்வளவுக் கட்டுப்பாடுகள் நிறைந்த புகழ்பெற்ற மண்டபம் இது.

இந்த மாமண்டபத்தில் 1991-ஆம் ஆண்டு முதல் குளிர் சாதன வசதி செய்யப்பட்டுள்ளது.

இம்மண்டபம் ஓங்கி உயர்ந்த விதானத்தையும், உயரத்திலிருந்து கலைநயமிக்க ஒளிர்விளக்குகள் தொங்கும் அழகையும், நாற் புறமும் எழில் மாடங்களும் கொண்டு காண்போரைக் கவர்ந் திழுக்கும் பேரழகு கொண்டது.

இன்று கோட்டைக்குள் இராணுவ அலுவலகங்களும், தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகமும், மத்திய அரசு தொல்பொருள் ஆய்வு அலுவல கங்களும், அருங்காட்சியகமும் அமைந்துள்ளன.

**அருங்காட்சியகம்**

வரலாற்று ஆவணங்களை, இனி வருகின்ற சந்ததியின ருக்கும் தெரியப்படுத்தும் நோக் கோடு கோட்டை வளாகத் துக்குள் ரிசர்வ் வங்கியின் அருகாமையில் அமைந்துள்ள கி.பி. 1795-இல் கட்டப்பட்ட ஒரு கட்டடத்தில் அருங்காட்சியகம் உள்ளது. இதற்கு அனுமதி இலவசம். பழமையான இக்கட்ட டத்தில் முந்தைய மதராஸ் வங்கியும், பின்னர் பம்பாய் மற்றும் வங்காள வங்கியும் இயங்கியுள்ளன.

மாடியிலுள்ள மிகப் பெரிய அரங்கம் பொதுமக்களின் பண்டமாற்று இடமாகவும், பொதுக்கூட்டங்கள் நடத்துமிட மாகவும், பரிசுச்சீட்டுக் குலுக்கல் நடத்துமிடமாகவும், கேளிக்கை விளையாட்டுகள் நடைபெறு மிடமாகவும் விளங்கியுள்ளது.

**கலங்கரை விளக்கம்**

கி.பி.1796-இல் இக்கட்ட டத்தின் உச்சியில் முதலாவது கலங்கரை விளக்கம் பொருத்தப் பட்டது. இது ஆங்கிலேய ஆட்சி அலுவலர்களின் உணவுக் கூட மாகவும் இருந்துள்ளது.

இக்கட்டடம் கி.பி. 1948-இல் தேசிய நினைவுச் சின்னமாக அறிவிக்கப்பட்டது. அதன்பின்னர் இக்கட்டடத்தில் அருங்காட்சியம் இயங்கி வருகிறது.

**காட்சிப் பொருள்கள்**

இந்தக் காட்சியகத்தில் எண்ணெய்ச்சாய உருவப் படங்கள், வெள்ளிப்பாத்திரங்கள், பீங்கான் பாத்திரங்கள், ஆவணங்கள், உலோகப் பதக் கங்கள் அரிய சித்திரங்கள் மற்றும் படைக்கலன்கள் உள்ளன.

---

**ஒரு பஞ்சு மெத்தை மீது நெருங்கியடித்து உட்கார்ந்திருக் கிறாயா அல்லது ஒரு பூசணிக் காய் மீது தனியாக வசதியாக உட்கார்ந்திருக்கிறாயா என்று கேட்டால் நான் பூசணிக் காயைத் தான் தேர்ந்தெடுப்பேன்.**

**—தொராவ்**

**புனித மேரி மாதாக் கோயில்**

கோட்டையின் வலதுபுறத்தில் உள்ள மாதா கோயில்,வரலாற்றுச் சிறப்புமிக்க, இந்தியாவில் முதன் முதலாக கட்டப்பட்ட ஆங்கிலேய மாதாக் கோயில் எனும் பெருமை கொண்டது. ஆசியக் கண்டத்திலுள்ள பழமையான கோயில்களில் இதுவும் ஒன் றாகும். கி.பி.1678-ஆம் ஆண்டு திருமதி பிரான்சிஸ் டே அவர் களால் அடிக்கல் நாட்டப்பட்டது. கோட்டைக்குள் வசித்தவர்கள் உவந்தளித்த அன்பளிப்புத் தொகையிலிருந்து இது கட்டப் பட்டதாகும். குண்டு துளைக்காத 5 அடி அகலம் கொண்ட சுவர் களைக் கொண்டது. 1680-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத் திலிருந்து இயங்குகிறது.

ராபர்ட் கிளைவ் திருமணம், எலிகு ஏல் திருமணம் போன்றவை இங்கு நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளாகும்.

16-ஆம் நூற்றாண்டில் வரையப்பட்ட கடைசி உணவு (Last Supper) வண்ண ஓவியம் இன்று வரையப்பட்டதைப் போல புத்தம் புதிதாகக் காட்சியளிக்கிறது.

**அகழிகள்**

புனித ஜார்ஜ் கோட்டைக் குள் உள்ள கட்டடங்களில் மரத்தாலான படிக்கட்டுகளும், தளங்களும் உள்ளன. ஆட்சி யாளருக்கெனத் தனி படிக்கட்டு களும் அமைக்கப்பட்டு நடை முறையில் செயல்படுத்தப் பட்டுள்ளதாகத் தொல்பொருள் அருங்காட்சியகக் கண்காணிப் பாளர் திரு கே.டி. நரசிம்மன்

சொல்கிறார். இது நாற்புறமும் அகழிகளால் சூழப்பட்டு எதிரிகள் நெருங்க முடியாத பாதுகாப்புப் பெற்றது.

புனித ஜார்ஜ் கோட்டையே இன்றைய சென்னை நகரம் உருவாக அடிப்படைக் காரணம் என்று சொல்லப்படும் அளவுக்குச் சிறப்புப் பெற்றது. கோட்டை இல்லையெனில் மதராஸ்பட்டணம் என்று அழைக்கப்படும் சிற்றூராகக் கூடச் சென்னை இருந்திருக்கும்.

வருகின்ற சந்ததியினருக்கும் வரலாறாய், கொழுந்துவிட்டு எரியும் தீச்சுவாலையைப் போல் ஒளிருகின்ற புகழோடு, தமிழ் நாட்டுக்கு, ஏன் இந்தியாவுக்கே ஒரு குன்றாச் சிறப்பாய், ஆட்சியாளர்களின் அன்றாடக் கனவாய், அல்லலுறும் ஆயிரக் கணக்கான பொதுமக்களுக்கு நலத் திட்டங்கள் தீட்டப்படும் மணிமேகலைக் கையிலுள்ள அமுதசுரபியாய் என்றென்றும் விளங்கும் புனித ஜார்ஜ் கோட்டையின் புகழ் நின்று நிலைத்து என்றும் பெருகும் என்றே கூறலாம்.

—எம்.வி.எம். அசோகன்

# கட்டுப்படுவோம் ... கடமை புரிவோம்!

## அ. அப்துல்லா அஹமத்

அழுக்கைச் சாப்பிட்டாலும்
காகம்
அன்றாடம் குளிக்கத்
தவறுவதில்லை!
ஆதவனும்
அவன் தம்பி சந்திரனும்
நேரத்தில் உதிக்கவும்
மறையவும் மறப்பதில்லை!
காற்றும் கடலலையும்
தம் கடமையில் ஒரு போதும்
ஓய்ந்ததில்லை!
காலத்தில் பூக்கவும் காய்க்கவும்
தாவரங்கள்
தவறுவதே இல்லை!
இதுபோல்,
இயற்கையின் இயக்க உருபுகள்
எதுவுமே
வழக்கத்திற்கு மாறாய்
செயல்படுவதில்லை!
ஆனால், படைப்பதில்
இறைவனுக்கு நிகரென
இறுமாப்பெய்தும் மானிடனோ
எதிர்பார்ப்பது போல்
நடப்பதில்லை!
இனிய உளவாக
இன்னா கூறுகையிலும்
தமிழை மாசுபடுத்துகின்றான்
தாய்தனக்குச் செய்ய
வேண்டிய தொண்டதனில்
தவறும்போது
உயர் குணநலன்களையே
மாசுபடுத்துகின்றான்
கொலையும் கொள்ளையையும்
கற்பழித்தலையும்
புரிகின்ற மனிதனோ
மானிட தர்மத்தையே
மாசுபடுத்துகிறான்
கள்ளக் கடத்தல்காரனும்
கறுப்புப் பணத்தானும்
தேசப் பொருளாதாரத்தை
மாசுப்படுத்துவோர்!
அத்துடன் நின்றானா மனிதன்?
இல்லை
அழுக்கையும் புகையையும்-
பிறர் அருவருக்கத்தக்க
ஒலியையும் கழிவு நீரையும்,
இப்படியே
காலனை வரவேற்கும்
காரியம் பலவும் புரிந்து
சுற்றுப்புறச் சூழலையே
மாசுபடுத்தி
காசு சேர்த்து மகிழ்கின்றான்!
சட்டம் பல இருந்தும்
திட்டம் நூறு வகுத்தும்
சுற்றுப்புறம் கெட்டுப்போமாயின்
நட்டமே வரும்
நலிவுகளே சூழும்!
நாட்டவர் அனைவரும்
உணர வேண்டிய
கட்டாயப் பாடமிது! மாசுக்
கட்டுப்பாட்டு வாரியத்திற்குக்
கட்டுப்படுவோம்- நம்
கடமையைப் புரிவோம்!



Phone 30491

**E.H.88, மூவேந்தர் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம் லிட்.,**

மேட்டூர் மெயின் ரோடு,
குருப்பநாயக்கன்பாளையம் P.O.
பவானி T.K.
பெரியார் மாவட்டம் - 638 302

**எங்கள் சங்கத்தில் ஜமுக்காளங்கள், ஹால் ஜமுக்காளங்கள் எல்லா சைஸ்களிலும் கிடைக்கும்**

**எங்கள் விற்பனை நிலையம்:**

பவானி கார்ப்பெட் கோ ஆப்ரடிவ்ஸ்
22, கும்பர்வேஷ் ஷாப்பிங் சென்டர்
சோலாப்பூர் - 413 002

எம். பழனிசாமி B.Com.,H.D.C.,
தனி அலுவலர்



எங்கள் நல்வாழ்த்துக்கள்



**பாரதி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம் லிட் நெ. E.H. 19**

88, காமராஜ் வீதி, எண் 2, சூரம்பட்டி P.O.

ஈரோடு - 638 009

**தயாரிப்பாளர்கள்:**

நேப்கின்கள்

கலர் துணிகள்

படுக்கை விரிப்புகள்

என்.எஸ். குமாரசுவாமி, பி.ஏ.,
கைத்தறி அலுவலர்/தனி அலுவலர்



வாழ்த்துக்கள்

**தொட்டம்பாளையம் அண்ணா நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிட், நெ.C.H.24**

தொட்டம்பாளையம் P.O.
பவானிசாகர் வழி - 638 451,
பெரியார் மாவட்டம்

**எங்களது தயாரிப்புகள்:**

சீகோ சேலைகள், கோவை காட்டன் சேலைகள், மற்றும் கோரா & கோரா சேலைகள்

A.M. ஹபிபுல்லா
மேலாளர்

V.R. பெரியசாமி
தனி அலுவலர்
கைத்தறி அலுவலர்



ESTD. 1982 Phone: 60343

**ஸ்ரீமாதேஸ்வரன் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் லிட்., EH 82**

**Head Office:**

சேத்துனாம்பாளையம் - அந்தியூர் - 638 501
பெரியார் மாவட்டம்

**விற்பனை நிலையம்:**

105, காமாட்சி அம்மன் கோயில் வீதி
பவானி - 1

எங்களிடம் தரமான அறை விரிப்பு ஜமுக்காளங்கள், ஈசிசேர், பந்தி ஜமுக்காளம் மற்றும் சின்னசைஸ் ஜமுக்காளங்கள் கிடைக்கும்.

தனி அலுவலர்

## அறிவின் திறவுகோல்

ஆசிரியர்:
துரை சந்திரசேகரன்

வெளியிட்டோர்:
அறிவுப் பொன்னி பதிப்பகம்
1-ஏ, சோதி நகர்
வடலூர் - 607 303

பக்கம்: 83 விலை: ரூ.20

'பெரியாரியல்' என்ற தலைப்பில் நான்கு கட்டுரைகளும் 'அம்பேத்காரியல்', 'தொழிலாளரியல்', 'கவிதையியல்' ஆகிய தலைப்புகளின் கீழே ஒவ்வொரு கட்டுரையும் கொண்டிலங்கும் தொகுப்பு நூல் இது. திரு கி. வீரமணி, திரு பிரபஞ்சன், திரு பழமலை ஆகியோரின் அணிந்துரை, மதிப்புரை, பாராட்டுரை ஆகியவை நூலின் முன்னோட்டமாக அமைந்திருக்கின்றன.

இந்நூலில் உள்ள எழுத்தோவியங்கள் யாவும், பேச்சு வன்மை மிக்க நூலாசிரியரால் அவ்வப்போது புதுவை வானொலியில் பேசப்பட்டவைகளாகும்.

ஆண் என்ற சொல்லே அழிக்கப்பட வேண்டும் என்னுமளவுக்குத் தந்தை பெரியார் அவர்கள் 'பெண்ணியம்' பற்றி அறிவித்த கருத்துகள், 'காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்தக் கதவொன்று கண்டறிவோம்' என்று முழங்கிய புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தெரிவித்த எழுச்சி மிக்க சிந்தனைகள், சமத்துவமும் சமூகநீதியும் நாடெங்கும் நிலவச் செய்யச் சட்டமேதை அம்பேத்கர் வெளிப்படுத்திய எண்ணங்கள் ஆகியவை இந்த நூலில் பரவலாகக் காணப்படுகின்றன.

சீர்திருத்தங்களை, பகுத்தறிவு வாதங்களை, புதுமைகளை விரும்புவோருக்குப் பெரிதும் இந்த நூல் இனிப்பதாய் இருக்கும்.

—'கங்கைகொண்டான்'

## தோட்டுக்காரி கதை

பதிப்பாசிரியர்:
முனைவர் வ. அலமேலு

வெளியிட்டோர்:
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சிஐடி வளாகம், தரமணி
சென்னை - 600 113.

பக்கம்: 141 விலை: ரூ.28

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமானது நடத்திவரும் சுவடியியல் பட்டய வகுப்பு, பழங்காலத் தமிழ்ச்




சுவடிகளைத் தேடிப்பிடித்துப் புது மெருகோடு தருவதில் புகழ்பெற்று வருகிறது. அதற்கு இந்தத் 'தோட்டுக்காரி கதை' நூல் ஒரு சான்றாகும்.

அக்காலத்தில், அம்மானை எனக் குறிப்பிடப்பட்ட கதைப் பாடலே இந்நூலின் இருப்பாகும். அதுவும் வில்லை முதன்மையாக வைத்துப்பாடும் வில்லுப்பாட்டு முறையில் அமைந்துள்ளன பாடல்கள். நாட்டுபுற இலக்கியத்திற்கு வலிவூட்டுவதாயுள்ள 'தோட்டுக்காரி கதை' இறைப்பற்றும் படிப்போர் மனதில் படியச் செய்வதாக உள்ளது.

ஒருத்தி- தோட்டுக்காரியாய்ப் பிறந்து, மறுபிறவியும் வாய்க்கப் பெற்றுத் தெய்வமாகிறாள். இது தான் கதை!

சகுனங்களால், கனவுகளால், அவரவர் செய்கிற தீமைகளால் எவ்வாறான பலாபலன்கள் கிட்டும் என்பன போன்ற கருத்துக்கள் நூலின் பல பகுதிகளில் நம் பார்வையில் படுகின்றன. இதற்கான மூலச் சுவடியை எழுதியவர் பால்நாடார் என்கிற சுப்பிரமணிய நாடார் என்று தெரிகிறது. இதன் காலம் 1917-ஆ ஆண்டு.

'பந்தெடுத் தாடிவாறாள்
என் நாச்சியார்
பந்தெடுத் தாடிவாறாள்...'

—என்பன போன்ற சுவைமிக்க பாடலடிகள் மட்டுமல்ல...

'அம்புபட்ட மானானேன்
அலையிட்ட துரும்பானேன்
கொம்பிழந்த மந்தியைப்போல்
குழந்தையில்லாக்
குறையானேன்
ஆடாத செக்கானேன்
அரசிழந்த பதியானேன்...'

—போன்ற உருக்கமிகு பாடல்களும் இனிய தமிழில் ஏற்றபல எடுத்துக்காட்டுகளோடு உருவாக்கப் பட்டிருக்கிற நூல் இது. தமிழார்வலர்கள் அனைவரும் படித்து மகிழலாம்.

—'மதுராந்தகன்'

## விவேக சிந்தாமணி

ஆசிரியர்: ஞா. மாணிக்கவாசகம்

வெளியீடு:
உமா பதிப்பகம்
58, ஐயப்ப செட்டி தெரு
சென்னை - 600 001

பக்கம்: 90 விலை: ரூ.12

நமக்குக் கிடைத்த இலக்கியச்

செல்வங்களுள் விவேக சிந்தா மணியும் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகின்றது. மணிமணியான கருத்துக்கள் கோக்கப்பட்ட மணி யாரமாக இதிலுள்ள பாடல்கள் விளங்குகின்றன.

உலக இயல்பை உள்ளது உள்ளபடி எடுத்துக்கூறுகின்ற பாடல்கள், இன்றைக்கும் பொருந் துவனவாக உள்ளன. வாழ்க்கையில் எப்படியெல்லாம் நடந்து கொள்ள வேண்டும், எப்படியெல்லாம் நடந்து கொள்ளக்கூடாது என்பதற்குத் தக்க உதாரணங்களுடன் அமைந் துள்ள பாடல்கள் படித்து மகிழ் தற்குரியது. எல்லாத் திறத்தாரும்- குறிப்பாக மாணவர்கள் படித்துப் பயன்பெற வேண்டிய கருத்துக் கருவூலம் இது.

—பி.வி. கிரி

**சுதந்திரப் பறவைகள்**

ஆசிரியர்: வல்லிக்கண்ணன்

வெளியீடு:
பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி
மயிலாப்பூர்
சென்னை - 600 004

பக்கம்: 162 விலை: ரூ.25

இந்த நூல் கரிசல்காட்டுப் பேச்சு வழக்கு விரவிவரும், இருபது கதைகளைக் கொண்டது. ஆசிரியர் வல்லிக்கண்ணனின் நுண்ணிய சமுதாய நோக்கமும், திண்ணிய எழுத்து வன்மையும் படிப்போரின் மனத்தைப் பற்றிக் கொள்ளும்.

காளவாய், வாழ்க்கை நாடகம், மனம் வெளுக்க, சாப்பாட்டு ராமன், எளிய காரியம், மாமா வந்த ஜோர், அரைகுறை, வெளிச்சம், விளையாட்டுப் பிள்ளை, சுதந்திரப் பறவைகள், ஒரு சின்னக் கேள்வி, அவள் சிரித்தாள், சந்திப்பு, முத்து மாலையின் மனமாற்றம், கொடுக்கல் வாங்கல், விழிப்பு, உரிமை, அழகைத் தேடியவள், ரொம்ப வேண்டியவர், வேதனை போன்ற தலைப்புகளில் சிறுகதைகளைப் படைத்துள்ளார்.

இவரது படைப்புகளில் சமுதாய அவலங்களையும், தனி மனித உணர்வுகளையும், அனைவரும் அள்ளிப்பருகும் ஆற்றோடையாக்கி யுள்ளார். எழுத்தாளர் உள்ளடக்கி எவரையும் படிக்கவைக்கும் பட்டறிவுப் பதியன் போடப்பட்ட, பண்பட்ட எழுத்துப் பிரவாகம். எல்லோரும் படிக்கலாம்.

—மா. அசோகன்

# தெரிந்துகொள்ளுங்கள்

☆ மனிதர்களின் வேலைகளை எளிதாக்கும் கம்ப்யூட்டர் என்னும் கணிப் பொறி பிறந்தது 1946-ஆம் ஆண்டில், அமெரிக்க நாட்டு, பிரிட்டன் பல்கலைக் கழகத்தில் முதன் முதலில் அதை உருவாக்கியவர், புகழ்பெற்ற கணிதமேதை ஜான் வான்நியூமன் ஆவார்.

☆ நகராட்சி என்பதை ஆங்கிலத்தில் Municipality என்று கூறுகிறோம். இச் சொல் முனிசிபியம் என்னும் லத்தீன் சொல்லிலிருந்து வந்தது. அச்சொல், ரோமா புரிக்கும் அதற்கடங்கிய சிற்றூர்களுக்கும் இடைப் பட்ட அரசைக் குறிப்பிட்டது.

☆ உலகப் புகழ்பெற்ற விளை யாட்டுகளில் ஒன்றான கிரிக்கெட் முதன்முதல் இங்கிலாந்து நாட்டில்தான் பிறந்தது. Cric என்னும் நார்டிக் சொல்லிலிருந்தே cricket என்னும் ஆங்கியலச் சொல் பிறந்ததாம்.

☆ உலகிலேயே மிக உயரமான கலங்கரை விளக்கு ஆலந்து நாட்டில், ஹெல்டர் அருகே உள்ள கிஜ்க்டுயின் என்ற இடத்திலிருக்கிறது இதன் உயரம் 197 அடி.

☆ பண்டைய எகிப்தியரும் ரோமானியரும் பென்சிலைக் காரீயத்தால் செய்தே எழுதப் பயன்படுத்தினார்கள். ஆனால் இப்போதோ, சாதாரணமான பென்சில்கள் சிறிய நுண்ணிய கார்பைட் கம்பிகளால் மரத் தால் மேற்பாகம் அமைக்கப் பட்டுக் குழாய்கள் கொண்டு செய்யப்படுகின்றன. இந்த முறையை 1791 பிரான்சு நாட்டில் நிகோலாஸ் ஜாக்குஸ்கோண்டி என்பவர் கண்டுபிடித்தார்.

☆ ஜப்பானிய மொழியில் Kara என்றால் வெறும் என்றும் ta என்றால் கை என்றும் பொருளாம். வெறும் கையைக் கொண்டே வெல்லுவது தானே கராத்தே!

—இந்திரன்

தமிழ் வளர்த்த பெரியார்

# செந்தமிழுக்குச் சீர்செய்த சேதுப்பிள்ளை



—அன்புப்பழம் நீ

கம்பரின் கவினுறு காவியமும், இளங்கோவின் இணையற்ற இனிமையும், வள்ளுவரின் வழுவற்ற வலிமையும் வானோங்கி வளரும் தமிழ்நாட்டில் பிறந்தவர் நம் சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை.

**சேது என்னும் பெயர் வர சீர் மிகுந்த காரணம்!**

பிறவிப்பெருமாள் பிள்ளைக்கும் சொர்ணத்தம்மையாருக்கும் 1896 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 2-ஆம் நாள் துன்முகி ஆண்டு மாசித் திங்கள் பூச நன்னாளில் ஆண் குழந்தையொன்று பிறந்தது. சேதுக்கடலாடி, இராமேச்சுரத்தீசனை நேசமுடன் வழிபட்டு வரங்கிடந்து பெற்ற அக் குழந்தைக்குச் 'சேது' என்றே பெயர் சூட்டிப் பெற்றோர் மகிழ்ந்தனர்.

சேதுவுக்கு 5 ஆண்டு நிரம்பும் போது கன்னிப் பருவம் எய்தியிருந்த அவர் தமக்கையார் உயிர்நீத்தனர். அதனால் 11 மக்களைப் பெற்றெடுத்த அப்பெற்றோர்க்குச் சேது ஒருவரே தனிமகனாக இருந்தார்.

தமக்கையை இழந்ததால் சேது ஒருவரே தனிமகனாக இருந்தார்.

**அன்னைத் தமிழுக்கு ஆற்றிய நாற்பதாண்டு நற்தொண்டு**

'டாக்டர் சேதுப்பிள்ளை' அவர்களைத் தமிழ் கூறு நல்லுலகமேயன்றிப் பாரதநாடு முழுவதும் நன்கறியும். அவர்கள் நாடறிந்த நாவலர். எளிய வேளாளர் குடும்பத்தில் பிறந்த அவர்கள், தம் சிறந்த நுண்ணறிவால் உயர்ந்த கலைஞராயினர். தமிழகத்தின் தலைசிறந்த சென்னை, அண்ணாமலைப் பல்கலைக்கழகங்களில் தமிழ்ப் பணியாற்றிப் பேராசிரியப் பெரும் பதவி பெற்றனர். இன்பத் தமிழன்னைக்கு 40 ஆண்டுகளாக தொண்டாற்றினார்.

சொல்லின் செல்வர் ஆங்கில நாட்டு உடையணிந்து, சட்டைக்கு மேல் கழுத்திற் கட்டிய வண்ணத் துணியைக் கையால் இழுத்த வண்ணம், இடையிடையே தோள்கள் குலுங்கச் சிங்கவேறு போல் அங்குமிங்கும் நோக்கியவாறு, மலர்ந்த முகத்துடனும் கிளர்ந்த உள்ளத்துடனும் நல்ல தமிழில் பேசும்போது வியந்து போற்றாதார் யாவர்?

**தமிழில் பேசிடவே நிதம் தண்டனைக் காசு தந்தார்**

சேதுப்பிள்ளை அவர்கள் 8-ஆம் வகுப்புப் பயிலும் காலத்தில் அவ்வகுப்பிற்குச் சரித்திரம் கற்பிக்க ஞானப் பிரகாச சுவாமிகள் என்னும் பாதிரியார் வந்தார். அவரது வகுப்பில் எந்த மாணவனும் மறந்தோ தவறியோ தமிழில் ஒரு சொற்கூடப் பேசலாகாது என்பது அவர் கட்டளை. எவனும் பேசினால், சொல்லுக்கு ஒரு காசு வீதம் தண்டனை கொடுத்தல் வேண்டும். அம் முறையிலே மிகுதியாகத் தண்டனைக் காசுகள் செலுத்தியவர் சேதுவே.

இவ்வாறு வகுப்பில் மாணவர் தமிழ் பேசுவதற்குத் தண்டனை விதித்த ஞானப் பிரகாசர், பின்னாளில் தம் முதுமைப் பருவத்தில் திருச்சி சூசையப்பர் கல்லூரியில் ஆட்சியாளராக இருந்து ஓய்வு பெற்றார். அவர் 85 ஆண்டுகள் நிரம்பிய முதியவராக அக் கல்லூரியில் தங்கியிருந்த நாளில் சேது, சென்னைப் பல்கலைக் கழக ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். அந்நாளில் சூசையப்பர் கல்லூரியில் நடைபெற்ற வீர

மாமுனிவர் விழாவுக்குப் பேராசிரியர் சேதுப்பிள்ளை விரிவுரையாற்றுவதற்கு அழைக்கப் பெற்றார். இவர் வருகிறார் என்பதையறிந்த ஞானப்பிரகாச சுவாமிகளுக்குப் பழைய நினைவு எழலாயிற்று.

45 ஆண்டுகட்கு முன்னால் அவர் பாளையங்கோட்டைப் பள்ளியில் ஆசிரியப் பணியாற்றிய காலத்தில் நிகழ்ந்தவை மனத் திரையில் தோன்றின. உடனே, ஞானப்பிரகாசர் சேதுப் பிள்ளையை எதிர்கொண்டு அழைத்து வருவதற்குப் புகை வண்டி நிலையத்திற்குச் சென்ற கல்லூரி மாணவர்களை வர வழைத்தார். அவர்களிடம், "நீங்கள் அழைத்து வரச் செல்லும் பேராசிரியரிடம் 'உங்களுக்கு ஞானப்பிரகாச சுவாமிகள் என்னும் ஆசிரி யரைத் தெரியுமா' என்று கேளுங்கள். அவர் தெரியு மென்றால் என்னிடம் அவரை அழைத்து வாருங்கள்" என்று வேண்டிக் கொண்டார்.

**மாணவரைக் கண்டு முகம் மலர்ந்த ஆசிரியப் பெருந்தகை**

புகைவண்டி நிலையம் சென்று பேராசிரியர் சேதுப் பிள்ளையை மாலையிட்டு வர வேற்று உந்து வண்டியொன்றில் அவரை அழைத்து வந்த மாண ்ர்கள், வரும் வழியிலேயே அவரிடம் 'பாளையங்கோட்டை சேவியர் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியப் பணியாற்றிய ஞானப் பிரகாச சுவாமிகளை அறி வீர்களா?" என்று பணிவுடன் வினவினார்.

'ஆம். அவரை நன்றாக அறிவேன்' என்று கூறி, அன்பால் உளமுருகினார் சேது. அவர் மாணவர்க்கு ஆங்கிலம் பயிற்றிய முறையினைப் பாங்குற பாராட் டினார். அம்மாணவர்கள், பேராசிரியர் சேதுப்பிள்ளை யைத் தொண்டு கிழவராக இருந்த ஞானப்பிரகாசர் அறைக்கு அழைத்துச் சென்றனர். நோயாலும் முதுமைப்பருவத் தாலும் பாயும் படுக்கையுமாகக் கிடந்த ஞானப்பிரகாசர், எவரிடமும் பேசலாகாது என்று மருத்துவர்கள் . விதித்திருந்த தடையையும் மீறிச் சேதுப் பிள்ளையைக் கண்டதும் அவர் எழுந்து அமர்ந்தார். மலர்ந்த முகத்துடன் பிள்ளையை வர வேற்றார். அன்போடு தமிழில் உரையாடினார்.

**மலரும் நினைவுகளைப் பகிர்ந்து கொண்ட பாங்கு**

அதுகண்டு மகிழ்ந்த சேதுப் பிள்ளை "நான் உங்களிடம் மாணவனாகப் பயின்ற நாளில் உங்கள் வகுப்பில் தமிழ் பேசியதற்காகச் சொல்லொன் றுக்கு ஒரு காசு வீதம் தண்டனை செலுத்தினேன். இன்று உங்கள் கல்லூரி விழாவில் 2000 தமிழ்ச் சொற்களுக்குக் குறையாமல் பேசப் போகிறேனே! அதற்கு முன்னதாகவே தண்டனைப் பணத்தை உங்களிடம் கட்டி விடலாமா?" என்று வினவினார்.

அப்போது ஞானப்பிரகாசர், "அந்நாளில் ஆங்கிலம் வேண்டி யதாக இருந்தது. நீங்கள் நன்கு ஆங்கிலம் கற்க வேண்டும் என்று நான் பெரிதும் விரும்பினேன், இந்நாளிலோ வீட்டிலும், நாட்டிலும், கல்லூரி ஏட்டிலும் எங்கும் தமிழ் மணம் பொங்கிக் கமழ்கின்றது. இன்று நான் விரும்புவது அதுதான். ஆதலின்

---

**இல்லால் அகத்திருக்க இல்லாதது ஒன்றுண்டோ**

**வீ**டு என்றாலும், இல் என்றாலும் மனை என்றாலும், அகம் என்றாலும் பொருள் ஒன்றே. இல் என்பது இல்லம் என்று வழங்கும். இல்லத்துக்கு உரியவள் இல்லாள் எனப்படுவாள், இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை என்றார் ஒரு தமிழ்க்கவிஞர். இல்லத்திலிருந்து செய்யும் அறம் இல்லறம் எனப்படும். இல் என்பது இல்லு என்றும், இல்லாள் என்பது இல்லாலு என்றும் தெலுங்கில் வழங்குகின்றன.

மலையாளத்தில் இல் என்பது இல்லம் என வழங்கும், வீட்டைக்குறிக்கும் மற்றொரு சொல் மனை, மனைக்குரியவளை மனைவி என்றும், மனையாள் என்றும் கூறுவர்.

- ரா.பி. சேதுப்பிள்ளை எழுதிய 'தமிழ்விருந்து' நூலிலிருந்து

★★★

## வானிலே தவழும் வெண் மேகமே...

முகில் என்பது தெலுங்கில் மொகிலு என்றும், கன்னடத்தில் முகில் என்றும், துளுவத்தில் முகில் என்றும் காணப்படுகின்றது. வானத்திலே தவழும் வெண்மேகத்திற்கு மஞ்சு என்று பெயர். தெலுங்கிலும், கன்னடத்திலும், மலையாளத்திலும் மஞ்சு உண்டு.

- ரா.பி. சேதுப்பிள்ளை எழுதிய 'தமிழ் விருந்து' நூலிலிருந்து

★★★

நானே இப்போது உங்களுடன் தமிழில் தானே பேசுகிறேன்" என்று அன்புக்னியுமாறு இனிய மொழி பகர்ந்தார்.

### அன்புமிகு இல்லத்தரசி ஆழ்வார் சானகியம்மை

'ஆழ்வார் சானகி' யென்னும் பெயருடைய பெண்மணியை மணந்தார். கம்பன் காவியக் கடலில் மூழ்கித் திளைக்கப் போகும் சேதுப்பிள்ளைக்கு அக்காவியத் தலைவியாகிய சானகியின் பெயரைத் தாங்கிய பெண்ணரசியே வீட்டம்மையாக வாய்த்தது மிகப் பொருத் தல்லவா?

அவர் எழுதிய நூல்களில் பலர் பாராட்டியது ஊரும் பேரும், தமிழின்பம், தமிழர் வீரம், தமிழ் விருந்து, வேலும் வில்லும்!

வெள்ளிதோறும் கம்ப ராமாயணம் வகுப்பை 5 ஆண்டுகளாக ஒய்.எம்.சி.ஏ.வில் நடத்தினார். 2 ஆண்டுகளி சிலப்பதிகார வகுப்பை கோகலே மண்டபத்தில் நடத்தினார். 2 ஆண்டுகளாக திருக்குறள் வகுப்பை சென்னை புரகிரசிவ் மேல்நிலைப் பள்ளியில் நடத்தினார். கந்தசாமி கோயில் அருகில் கந்தபுராண வகுப்பை நடத்தினார்.

பட்டிமன்றம் என்ற பெயரைத் தமிழகத்தில் பரவ வைத்தவர் அவரே. ஒய்.எம்.சி.ஏ. பட்டிமன்றத்தில் பல கல்லூரி மாணவ, மாணவிகளுக்குப் பேச்சுப் பயிற்சியை சனிக் கிழமை தோறும் 2 ஆண்டுகள் வரை தந்தவர்.

'திருவள்ளுவர் நூல்நயம்' என்னும் நூல் மாணவர் யாவருக்கும் பயன்படும். கா.சு. பிள்ளை அவர்கள் பொன்னுரை களால் போற்றிப் புகழ்ந்த நூல் இது.

**எல்லாவிதமான குறைகளையும் தடைகளையும் வென்று விடக்கூடிய ஒரே சாதனம் உழைப்பு. உழைப்பு மட்டுமே.**

**–இங்கிலாந்துப் பழமொழி**

பேராசிரியர் தம் வாழ் நாளில் பெற்ற சிறப்புகள் அனைத்துள்ளும் தலைமை வாய்ந்தது, சென்னைப் பல் கலைக் கழகம் தனது நூற் றாண்டு விழாவில் 'இலக்கியத் துறைப் பேரறிஞர்' என்று அவருக்கு அளித்த அரிய பட்டமேயாகும்.

### என்றும் புகழ் மணக்கும் இனிய தமிழ்த் தொண்டு

தமிழ்ப் புத்தாண்டின் பிறப்பு நாளன்று **13.4.1961** பேராசிரி யருக்குத் தமிழகப் பெரு மக்களின் சார்பில் சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிமன்றத் தில் வெள்ளிவிழா எடுத்தனர்.

ஆட்சிச் சொற்காவலர் திரு. கீ. இராமலிங்கனார், ஒரு நாள் சேதுப்பிள்ளை வீட்டுக்குச் சென்றதும் குடிப்பதற்குப் பால் கொடுத்தாராம். என்னபால்? 'தமிழ்ப் பால்' குடிப்பதற்குக் கொடுத்தார் என்றார்.

**9.2.1943** அன்று சென்னை சட்டக் கல்லூரி மண்டபத்தில் கோவைக் கிழார் இராமச்சந்திரன் செட்டியார் தலைமையில் அறிஞர் அண்ணாவுக்கும் சேதுப் பிள்ளைக்கும் சொற்போர் நடைபெற்றது.

சொல்லின் செல்வர் **25.4.1961** அன்று காலை **11.30** மணிக்கு மீளா உலகம் புகுந்தார். **2.3.1996** அன்று அவருடைய நூறாவது ஆண்டு முடிந்து விட்டது. ஆனால் இன்னும் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் அவர் தமிழுக்கு ஆற்றிய நற்தொண்டின் புகழ் என்றும் மணக்கும் என்பதில் ஐயமில்லை.

நல்வாழ்த்துக்கள்

# ஈரோடு நகராட்சி

## நேரு வேலைவாய்ப்புத் திட்டம்

## நகர்ப்புறத்திலுள்ள நலிவடைந்த வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள ஏழை எளிய மக்களுக்கான திட்டங்கள்

| **1994-95** | **பயன்பெற்றோர்** | **கடன்** | **மானியம்** |
|---|---|---|---|
| 1. வங்கிகள் மூலம் கடன் வழங்கி சுய வேலைவாய்ப்பிற்கு நிதி உதவி அளிக்கும் திட்டம்: | 1,544 நபர்கள் | ரூ. 90,74,124 | ரூ.30,24,708 |
| **1993-94** | | | |
| 2. சிறுவினைத் திட்டத்தின் கீழ் பயிற்சி அளித்தல், திட்டப் பயன் அடைந்தவர்கள்: | 107 நபர்கள் | | ரூ.1,25,190 |
| 3. வீடு மற்றும் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயிற்சியளித்தல் திட்டப் பயன் அடைந்தவர்கள்: | 30 நபர்கள் | | ரூ.45,000 |

**பொ. ஸ்ரீராமுலு**
ஆணையாளர்
ஈரோடு நகராட்சி

நல்வாழ்த்துக்கள்

# ஈரோடு நகராட்சி

## ஈரோடு நகராட்சியில் 1994-95-ஆம் ஆண்டில் செய்து முடிக்கப்பட்ட பணிகள் பற்றிய விவரங்கள்

சாலைப் பணிகள், கட்டடப் பணிகள், பொதுக்கழிப்பிடம், சுகாதாரப் பணிகள், பள்ளிக்கூடப் பராமரிப்புப் பணிகள், பூங்கா பராமரிப்பு, பேருந்து நிலையம், தினசரி மார்க்கெட், குடிநீர் விநியோக பணிகள், சாக்கடை வசதி, சத்துணவுக் கூடப் பராமரிப்பு, தாய்சேய் இல்லப் பராமரிப்புப் பணிகள்:

*367* வேலைகள் ரூ *193.39* இலட்சம்

## ஈரோடு நகராட்சியில் 1995-96-ஆம் ஆண்டில் நடைபெறும் பணிகள் பற்றிய விவரங்கள்

சாலைப் பணிகள், கட்டடப் பணிகள், பொதுக்கழிப்பிடம், சுகாதாரப் பணிகள் பள்ளிக்கூடப் பராமரிப்புப் பணிகள், பூங்கா பராமரிப்பு, பேருந்து நிலையம், தினசரி மார்க்கெட், குடிநீர் விநியோக பணிகள், சாக்கடை வசதி, சத்துணவுக் கூடப் பராமரிப்பு, தாய்சேய் இல்லப் பராமரிப்புப் பணிகள்:

*436* வேலைகள் ரூ *.294.63* இலட்சம்

**பொ. ஸ்ரீராமுலு**
ஆணையாளர்
ஈரோடு நகராட்சி

# பொதுத்தேர்தல்: ஆணையர்கள் அறிவிப்பு

நாடாளுமன்றம் மற்றும் சட்டப் பேரவைக்கான பொதுத்தேர்தல் தேதி களை 19.3.1996 அன்று, மத்தியத் தேர்தல் ஆணையத்தின் ஆணையர்கள் திரு டி.என். சேஷன், திரு ஜி.வி.ஜி. கிருஷ்ணமூர்த்தி, திரு எம்.எஸ்.கில் ஆகியோர் அறிவித்தார்கள்.

அதன்படி- தமிழ்நாட்டில் உள்ள நாடாளுமன்றத் தொகுதிகளுக்கும், சட்டமன்றத் தொகுதிகளுக்கும் ஏப்ரல் மாதம் 27, மே 2 ஆகிய தேதிகளில் தேர்தல் இரண்டு கட்டமாக நடத்தப் படும்.

25 நாடாளுமன்றத் தொகுதி களிலும், அதில் அடங்கியுள்ள 150 சட்டமன்றத் தொகுதிகளிலும் ஏப்ரல் மாதம் 27ஆம் தேதியன்று வாக்குப்பதிவு நடைபெறும்.

14 நாடாளுமன்றத் தொகுதி களிலும், அதில் அடங்கியுள்ள 84 சட்டமன்றத் தொகுதிகளிலும் மே மாதம் 2 ஆம் தேதி அடுத்தகட்ட வாக்குப்பதிவு நடைபெறும்.

ஏப்ரல் 27, மே 2 ஆகிய நாட்களில் வாக்குப்பதிவு நடைபெறும் தொகுதி களின் வாக்குகள், மே மாதம் 8ஆம் தேதி எண்ணப்பட்டு, அன்றே முடிவு அறிவிக்கப்படும். தமிழகச் சட்டமன்றத் தேர்தல் வாக்குகளும் அன்றே எண்ணப்படும்.

இந்தியா முழுமைக்குமாக ஐந்து மாநிலங்கள்- புதுவை யூனியன் பிரதேசம் ஆகிய 6 இடங்களில் சட்டப் பேரவைத் தேர்தல்களும், மக்களவைத் தேர்தல்களும் நடைபெறும். மொத்தத்தில், இத்தேர்தலில் 59 கோடிப் பேர் வாக்களிப்பார்கள். தேர்தல் பணி களில் 50 இலட்சம் அரசு அலுவலர்கள் ஈடுபடுத்தப்படுவர். தேர்தலின்போது, பாதுகாப்புப் பணியில் 15 இலட்சம் மாநிலப் போலீசாரும், ஒரு இலட்சம் மத்திய ரிசர்வ் படைப் போலீசாரும் ஈடுபடுத்தப்படுவர் என்றும் தேர்தல் ஆணையாளர்கள் தெரிவித்தனர்.

தற்போதைய மக்களவையின் பதவிக்காலம் ஜூலை 8-ஆம் தேதியும், தமிழகச் சட்டப்பேரவையின் பதவிக் காலம் ஜூன் 30-ஆம் தேதியும் முடிவடைகிறது. கேரள சட்டப் பேரவை பதவிக்காலம் ஜூன் 28, அரியானா சட்டப் பேரவை பதவிக் காலம் ஜூலை 8, மேற்கு வங்க சட்டப் பேரவை பதவிக் காலம் ஜூலை 17, அசாம் சட்டப் பேரவை பதவிக்காலம் ஜூலை 28, புதுவை யூனியன் பிரதேசச் சட்டப் பேரவை பதவிக்காலம் ஜூலை 25 ஆகிய தேதிகளில் முடிவடை கின்றன.



'தமிழ்ப் புலவர் தமக்குள்ளே
மாறுபட்ட தன்மையினால்
இந்நாள் மட்டும்
தமிழ்ப்பெருநா டடைந்துள்ள
தீமையினைத் தமிழறிஞர்
அறிகி லாரோ?

—புரட்சிக் கவிஞர்

# பண்டைத் தமிழரின் கடல் வழி வணிகம்

தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை, இவ் வாண்டு தமிழ்நாட்டில் வரலாற்றுச் சிறப்புமிக்க அழகன்குளம் (இராமநாதபுரம் மாவட்டம்), பூம்புகார் (நாகை காயிதே மில்லத் மாவட்டம்), கரூர் (தீரன் சின்னமலை மாவட்டம்) சேந்த மங்கலம் (விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம்) ஆகிய நான்கு இடங்களில் நில அகழாய்வை மேற்கொண் டுள்ளது.

பாண்டியர்களின் கடற் கரைத் துறைமுகமாகத் திகழ்ந் தது அழகன்குளம். பண்டைய நகரங்களுள் பெருஞ்சிறப்புடன் விளங்கியது பூம்புகார் நகரம். இது சோழர்களின் தலை நகரமாகவும், துறைமுகமாகவும் திகழ்ந்தது.

கரூர், சேரர்களின் இரண்டாம் தலைநகராக இருந் திருக்கிறது.

சோழர்களின் கீழ் ஆட்சி செய்த குறுநில மன்னர்களில் குறிப்பிடத்தக்கவர் காடவ ராயர்கள். இவர்களின் தலைமை யிடம் சேந்தமங்கலம்.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் முன்னர் இத்துறை அகழாய்வுப் பணியை மேற்கொண்டபோதும் பல அரிய தொல்பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**வரலாற்றுச் சான்றுகள்**

தற்பொழுது அழகன் குளத்தில் நடைபெற்றுக் கொண் டிருக்கும் அகழாய்வில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள தொல் பொருள்கள் தமிழர்நாகரீகத்தின் சிறப்பினையும், அவர்களின் வரலாற்றிற்கு மேலும் சான்று களாகத் திகழும் வகையிலும் அமைந்துள்ளன.

அழகன்குளம் அகழ்வாய்வில் பண்டைத் தமிழ் எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடுகளும் குறியீடுகளைக் கொண்ட பானை ஓடுகளும், பல விலை மதிப்பற்ற கற்கலால் ஆன மணிகளும் சங்கு வளையல்களும் குறிப்பிடத் தக்கவைகளாகும்.

**பானையில் கப்பல்**

அழகன்குளம் அகழாய்வில் கிடைத்த மற்றொரு சிறப்பான தொல்பொருள், கப்பல் உருவம் பொறிக்கப்பட்ட பானை ஓடு ஆகும். கப்பல் உருவம் பொறிக் கப்பட்டுக் காணப்பெறும் பானை ஓடு இப்போதுதான் முதன்முதலில் தமிழகத்தில் கிடைத்துள்ளது.

ஆனால், இலங்கையில் பிராமிக் கல்வெட்டொன்றின் இறுதியில் கப்பல் உருவம் முன்பே கண்டுபிடிக்கப்பட்டி ருக்கிறது.

அழகன்குளத்தில் கிடைத் துள்ள இப்பானை ஓடு ரௌலெட்டட் எனப்படும் பானை ஓட்டின் வகையைச் சேர்ந்தது. இவை கி.மு. முதல் நூற்றாண்டு முதல் கி.பி. முதல் நூற்றாண்டு வரை புழக்கத்தில் இருந்தன. இதன்மூலம் பண்டைத் தமிழரின் கடல் வழிப் பயணமும், பிற நாடுகளுக்குக் கப்பல் மூலம் அவர்கள் சென்று வாணிகத் தொடர்பு கொண்டி ருந்ததும் உறுதிப்படுத்தப்படு கின்றன. தற்போது நடைபெற்று வரும் அகழாய்வில் மேலும் சில அரிய தொல்பொருட்கள் கிடைக்கக்கூடும் என்பது திண்ணம்.

---

கல்வியின் குறிக்கோள், நல்லதொரு நிகழ்ச்சியை உண்டாக்க வேண்டும். அவ்வாறன்றி, அறிவை மட்டும் புகட்டுவதும், பரிமாறிக் கொள்ளுவதும் மட்டுமே கல்வி யின் குறிக்கோள் ஆகிவிடாது

- டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்

எல்லா உலகங்களையும் விடப் பெரியது மனித மனம்!

- பேரறிஞர் அண்ணா

புத்திசாலித்தனத்துக்கு எந்தப் பக்கம் திரும்பினாலும் எதிர்ப்புகள் உண்டு. ஆனால் முட்டாள்தனத்துக்கு அப்படிப் பட்ட துன்பங்கள் எதுவும் கிடையாது.

—எல்பர்ட்

போன்: 21458 பவானி
30458 பவானி

# ஸ்ரீ வீரமாத்தி சேம்பர்ஸ் & ஸ்ரீ வீரமாத்தி டயர்ஸ்
## சக்தி பிரிக்ஸ் இண்டஸ்டீரிஸ்

**அலுவலகம்:**
பவானி மெயின் ரோடு
காளிங்கராயன்பாளையம்
பவானி அஞ்சல்

**பேக்டரி**
கேசரிமங்கலம்
சித்தார்

1. எங்களிடம் தரமான டேபிள் மோல்டு செங்கல் எந்த நேரத்திலும் கிடைக்கும்

**உயர்ந்த ரகம்** **சிறந்த சேவை**

2. கட்டடங்களுக்கு ஸ்ரீ சக்தி ஏஜென்ஸீஸ் மூலம் இரும்பு, பெயிண்ட், சிமெண்ட் முதலான பொருட்கள் கிடைக்கும்.

நல்வாழ்த்துக்கள்

மொத்தமாகவும், சில்லரையாகவும் தரமான மளிகைச் சாமான்கள் மற்றும் அரிசி பெறுவதற்குக் கீழ்க்கண்ட கைராசி ஸ்தாபனத்தை அணுகவும்:

## ஜெயசீலன் ஸ்டோர்ஸ்

316, மெயின் ரோடு, பவானி - 638 302

தொலைபேசி: 30210

உரிமையாளர் ஜே. குணசீலன்

மொத்தமாகவும், சில்லரையாகவும் அரிசி வாங்குவதற்கு கீழ்க்கண்ட கைராசி நிறுவனத்தை அணுகவும்

## கார்த்திகா டிரேடர்ஸ்

13, அந்தியூர் ரோடு, பவானி - 638 302

தொலைபேசி: 20233

உரிமையாளர் ஜே. ரமேஷ்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927




தூய
பட்டு

தூய
சரிகை





ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

HTA 7556.9

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23

